# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 10.05.2022 supeedsam.com supeedsam@gmail.com







## ராஜபக்சக்களுக்கு எதிராக நாடு முழுவதும்

# கலவரம் வெடித்தது







## முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரை,பல வாகனங்களுக்கு சேதம்

காலி முகத்திடலில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த போராட்டக்காரர்கள் மீது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து அந்தப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகின்றது.

அலரி மாளிகையில் நேற்று (09) காலை பிரதமரை சந்தித்த ஆதரவாளர்கள் அதனை தொடர்ந்து காலி வீதியில் அமைக்கப்பட்டிருந்த மைனாகோகம பகுதியில் இருந்தவர்கள் மீது

02 ஆம் பக்கத்தில்...

## நேற்றைய நாள் மிகவும் மோசமானது

### கொழும்பு பேராயர்



நேற்றைய நாள் மிகவும் மோசமானது எனவும், எமது நாட்டின் போக்கை மாற்றியமைக்க வேண்டும் என்றும் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக் களத்திற்கு சென்றிருந்த போதே கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு தெரிவித்திருந்தார்.

நாட்டை ஆட்சி செய்யும் தலைமைகள் வீடுகளுக்குச் செலவதுடன், நாடு இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் மஹிந்த பதவி விலகினார்



பிரதமர் மஹிந்த ராஜபக்க்ஷ தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷவிடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று காலை அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஷேட உரை...

அரசியல் இலாபங்களுக்காக நாட்டை அராஜகமாக்க விரும்பவில்லை என அவர் நேற்று (09) தனது விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர்

02 ஆம் பக்கத்தில்...

## ராஜபக்சக்களின் வீடுகளும் தீக்கிரை



ஹம்பாந்தோட்டை, மெதமுல்லனவில் உள்ள ராஜபக்ச குடும்பத்தின் பூர்வீக வீடு நேற்றிரவு போராட்டக்காரர்களால் தீவைத்து எரிக்கப்பட்டது.

அத்துடன், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் குருநாகல வீடும் நேற்றிரவு

02 ஆம் பக்கத்தில்...






## கொழும்பில் நடைபெற்ற வன்முறைக்கு ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ் மா மூவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்

( வாஸ் கூஞ்ஞ)

திங்கள் கிழமை (09.05.2022) கொழும்பில் நடைபெற்ற வன்முறைக்கு ஜனாதிபதி பிரதமர் மற்றும் பொலிஸ் மா அதிபதியாகிய மூவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். இவர்கள் உடன் தங்கள் பதவிகளிலிரந்து இராஜினாமா செய்ய வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரனியுமான எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...






## அலரிமாளிகை அருகே பதற்றம்: வானை நோக்கி துப்பாக்கிச் சூடு

அலரி மாளிகை அருகே அமைதி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தவர்கள் மீது, அரசாங்க ஆதரவு வன்முறைக் கும்பல் தாக்குதல் நடாத்திய நிலையில், நேற்று (9) இரவு மீண்டும் பொது மக்கள் அப்பகுதியில் ஒன்று கூடி பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அலரிமாளிகைக்குள் நுழைய தொடர்ச்சியாக முற்பட்டதால் அங்கு பதற்ற நிலை தொடர்ந்தது.. இந்நிலையில் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்புகைப் பிரயோகம் மற்றும் நீர்த் தாரை

02 ஆம் பக்கத்தில்...

# மேலும் ஒரு துப்பாக்கிப் பிரயோகம் - இருவர் பலி!

வீரகெடிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 8 பேர் காயமடைந்து வீரகெடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சிலர் வீரகெடிய வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக தங்காலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். வீரகெடிய பிரதேச சபைத் தலைவரின் வீட்டுக்கு தீ வைப்பதற்காக சிலர் வருகை தந்துள்ளனர். இதன்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அலரிமாளிகை அருகே பதற்றம்; வானை நோக்கி துப்பாக்கிச் சூடு

பிரயோகத்தை முன்னெடுத்துள்ளனர்.

அதன் பின்னர் அலரி மாளிகையிலிருந்து வானை நோக்கி துப்பாக்கிச் சூடும் நடாத்தப்பட்டது.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாக அங்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலையில், அலரி மாளிகையின் பாதுகாப்பில் இராணுவத்தின் விஷேட படையணியினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அலரி மாளிகையின் பாதுகாப்பை உறுதி செய்ய தொடர்ச்சியாக ட்ரோன் கெமராக்கள் மூலம் பாதுகாப்பு தரப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க இன்று இரவு ஆரம்பித்தது.

அத்துடன் அலரி மாளிகையின் பின் பக்க நுழை வாயில் அருகே இன்று இரவு திடீர் தீ ஒன்றினை அவதானிக்க முடிந்தது. ஆர்ப்பாட்டக் காரர்களால் அந்த தீ வைக்கப்பட்டிருக்கலாம் என நம்பட்டும் நிலையில் அதனை அனைக்க பொலிசார் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் நடைபெற்ற வன்முறைக்கு ஜனாதிபதி, பிரதமர்,

உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரனியுமான எம்.ஏ.சுமந்திரன் திங்கள் கிழமை (09)

கொழும்பில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு தெரிவிக்கையில்

இலங்கை மக்களினதும் எங்களினது நிலைப்பாடானது ஜனாதிபதியும் பிரதமரும் தங்கள் பதவிகலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்பதே ஆகும்.

தற்பொழுது பிரதமர் இராஜினாமா செய்திருப்பதை ஜனாதிபதி எற்றுக் கொண்டிருப்பார் என நினைக்கின்றேன்.

ஏனென்றால் எற்கனவே பிரதமர் தனது பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என கேட்டு இருந்தார்.

இந்த விடயத்தில் எங்கள் கருத்தும் மிகவும் தெளிவாகவே இருந்தது. இருவரும் உடனடியாக தங்கள் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்பதே.

தற்பொழுது பிரதமர் இராஜினாமா செய்திருந்தாலும் ஜனாதிபதியும் இராஜினாமா செய்ய வேண்டும்.

விஷேடமாக நேற்று (திங்கள்கிழமை 09.05.2022) இடம்பெற்ற நிகழ்வை பார்க்கும்போது பிரதமர் இராஜினாமா செய்வது மட்டுமல்ல அவர் வன்முறையை தூண்டியமைக்காக கைது செய்யப்பட வேண்டும் அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

தங்கள் ஆதரவாளர்களை கொழும்புக்கு வரவழைத்து கடந்த ஒரு மாத காலமாக அமைதியாக போராட்டங்களை நடாத்திக் கொண்டு இருந்தவர்களின் மீது இந்த வன்முறையை கட்டவிழ்த்து விட்டதிற்காக மகிந்த ராஜபக்ச கைது செய்யப்பட வேண்டும்.

ஆனால் இத்துடன் இவ் போராட்டம் நின்றுவிடாது இந்த பிரச்சனைக்கு மூலக்காரணம் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச

ஆகையினால் கோட்டபாய ராஜபக்ச உடனியாக தனது பதவியை விட்டு விலக வேண்டும்.

இடைக்கால அரசு இனி சரி வருமோ என்பது தெரியாது. ஜனாதிபதியால் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் நேற்று (09) நடைபெற்ற நிகழ்வை பார்க்கின்றபோது இவ்வாறான இடைக்கால் அரசு ஒன்று உருவாக முடியாதுள்ளது

ஆனால் இருவரும் பதவி விலகி இடையில் ஒரு காபந்து அரசு நிறுவப்பட்டு தேவைகள் ஏற்பட்டால் தேர்தலுக்கு செல்ல வேண்டிய தேவை எற்பட்டுள்ளது.

நேற்று (09) நடைபெற்ற வன்முறையானது பிரதமர் தனது ஆதரவாளர்களை கொழும்புக்கு வரவழைத்து அவர்களுடன் ஒரு கூட்டத்தை நடாத்திய பின்பே இவ் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது.

ஆகவே இதற்கான பொறுப்பை மகிந்த ராஜபக்சவே ஏற்க வேண்டும். அவரின் வீட்டுக்கு முன்பாக இருந்த ஆர்ப்பாட்டகாரர்களைத் தாக்கி அவர்களின் கூடாராங்களை தீயிட்டு கொழுத்திய பின்பு இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இருந்த ஆர்பாட்டக்காரர்களையும் தாக்கியுள்ளனர்.

இந்த இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து வரும் வரைக்கும் பொலிசார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதற்கு ஜனாதிபதியும் பொலிஸ் மா அதிபதியும் பொறுப்பாளிகள். ஆகவே பொலிஸ் மா அதிபதியும் தனது பதவியிலிருந்;து விலக வேண்டும் என்பதே ஆகும்.

இந்த பிரச்சனையில் வெளிநாடுகள் தலையிட வேண்டிய அவசியம் கிடையாது நாட்டுக்குள்ளேயே இவ் பிரச்சனையை தீர்த்துக்கொள்ள வேண்டும். இவர்கள் உடனடியாக பதவி விலகினால்தான் அடுத்த நடவடிக்கையில் ஈடுபட நேரிடும் என இவ்வாறு தெரிவித்தார்.

## ராஜபக்சக்களின் வீடுகளும் தீக்கிரை

தீக்கிரையாக்கப்பட்டது.

கொழும்பு – காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மஹிந்த ராஜபக்ச ஆதரவாளர்கள் நேற்று தாக்குதல் நடத்தியதை அடுத்து நாடு முழுவதும் அரசு மற்றும் ஆளும் கட்சி அரசியல் வாதிகளுக்கு எதிராக வன்முறை வெடித்தது.

இவ்வாறான நிலையிலேயே ராஜபக்ச குடும்பத்தின் பூர்வீக வீடு நேற்றிரவு போராட்டக்காரர்களால் தீவைத்து எரிக்கப்பட்டது. தொடர்ந்து மஹிந்தவின் குருநாகல வீடும் தீக்கிரையாக்கப்பட்டது. அத்துடன், தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தந்தையான டி.ஏ.ராஜபக்ச நினைவுத் தூபியும் நேற்று மாலை இடித்து அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மஹிந்த பதவி விலகினார்

மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை சீர்குலைக்க நாங்கள் விரும்பவில்லை. சவால்களை எதிர்கொண்டு சவால்களை சமாளிப்பதுதான் எனது கொள்கை. சவால்களை கண்டு தப்பித்து ஓடும் பழக்கம் எங்களிடம் இல்லை. அவற்றுக்கான முன்னுதாரணங்களை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எதிர்க் கட்சிகள் அதன் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுகின்றன. அவர்களுக்குத் தேவையானது அதிகாரம் மட்டுமே. ஜனாதிபதிக்கு எவ்வித தடையின்றி முடிவெடுக்க முடியும்.

பொதுநலன் கருதி ஒரு முடிவு எடுக்கப்பட்டால் அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார். நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கை தான் என்னை அரசியலுக்கு வர வைத்தது. இப்போது என்ன செய்வது என்று நான் உங்களிடம் கேட்கிறேன்.

உங்களுடன் ஒரு முடிவுக்கு வர நாங்கள் தயாராக இருக்கிறோம். முதலில் தாய்நாடு, இரண்டாவது தாய்நாடு, மூன்றாவது தாய்நாடு. உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.




## ராஜபக்சக்களுக்கு எதிராக நாடு முழுவதும்

தாக்குதல் நடத்தியதுடன் அப்பகுதியிலிருந்த கூடாரங்களையும் அகற்றியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரதமரின் ஆதரவாளர்கள் கோட்டாகோகம பகுதிக்கு சென்று அங்கிருந்த கூடாரங்கள் சிலவற்றை அகற்றியிருந்ததுடன் சில கூடாரங்களை தீயிட்டு கொளுத்தியிருந்தனர்.

இதனையடுத்து, அந்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் அழைக்கப்பட்டனர்.

பதற்ற நிலையை தணிப்பதற்கு கண்ணீர்ப்புகை பிரயோகமும் நீர்த்தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, முதலில் மேல் மாகாணத்திலும் பின்னர் நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கலவரம் சம்பந்தமான தொகுப்பு...

### கலவரபூமியாகியது காலிமுகத்திடல் : அரச ஆதரவாளர்களால் தீ வைப்பு

கொழும்பு காலி முகத்திடலில் அமைதியான முறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதில் 300பேருக்கு மேல் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை அலரிமாளிகையில் பிரதமர் தலைமையில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களுக்கு விசேட கூட்டம் இடம்பெற்றது. பிரதமர் மஹிந்தவை பாதுகாப்போம் அலரி மாளிகை முன்பாக பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அலரிமாளிமைக்கு முன்னால் இடம்பெற்ற மைனா கோ கம வை அடித்து நெருக்கி தீயிட்டுக்கொளுத்தினர்.

இதன் பின்னர் காலிமுகத்திடல் பகுதியில் அமைந்துள்ள கோட்டா கோ கம பகுதிக்கு விரைந்த அரச ஆதரவாளர்கள் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டதுடன் கலக செயல்களில் ஈடுபட்டுவருவதுடன், காலி முகத்திடலில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களினால் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களை தகர்த்தெறிந்து தீயிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கலகக்காரர்களை அடக்கும் முகமாக பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த கலக நடவடிக்கைகளின் காரணமாக காயமடைந்துள்ள 9 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பொலிஸ் தடையை மீறி காலி முகத்திடல் போராட்டக்களத்தில் கலவரத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது கலவரம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை ஏற்றிச் சென்ற பஸ்கள் மீது பொதுமக்கள் தாக்குதல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை ஏற்றிச் சென்ற பஸ்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை கொழும்புக்கு ஏற்றிச் சென்ற பல பஸ்கள் நகரை விட்டு வெளியேற முற்பட்ட போது பொதுமக்களால் தாக்கப்பட்டுள்ளன.

குறித்த பஸ்கள் கொழும்பு திம்பிரிகஸ்யாயவுக்கு அருகில் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

### பேரவாவிக்குள் குதித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களை போராட்டக்காரர்கள்தடுத்து நிறுத்தியதையடுத்து பேரவாவிக்குள் பாய்ந்து போராட்டக்காரர்களிடமிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து போராட்டக்காரர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள சிலர் பேரவெவவில் குதித்து தப்பிச்சென்றுள்ளனர்.

### பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் வீடுகள், வாகனங்கள் தீக்கிரை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் வாகனங்கள் மற்றும் வீடுகள் போராட்டக்காரர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், வாகனங்கள் மற்றும் அலுவலகங்கள் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களால் சேதமாக்கப்பட்டும், தீ வைக்கப்பட்டும் வருகின்றது.

அந்த வகையில் முன்னாள் அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோவின் குருநாகலிலுள்ள கட்சி அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நகர மேயர் துஷார சஞ்சீவவின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்தோடு முன்னாள் அமைச்சர் சனத் நிஷாந்தவின் கட்டிடத்திற்கும் தீ வைக்கப்பட்டள்ளது.

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் வீட்டின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, சன்ன ஜயசுமன, கோகிலா குணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி ஆகியோரின் வீடுகளும் தாக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் அவரது மகன் அமைச்சர் கனக ஹேரத் ஆகியோரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சிக்கு சொந்தமான சில்லறை விற்பனை நிலையமொன்று பண்டாரவளையில் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. ஹொன்னந்தர பகுதியிலுள்ள முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகேவின் வீடும் சற்று முன்னர் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறையில் உள்ள எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் இல்லத்துக்குள் வலுக்கட்டாயமாக நுழைய முற்பட்ட போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்துக்கு தீவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோவின் குருநாகலிலுள்ள கட்சி அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் சிலவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதுடன், தீவைப்பு சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்திக அனுருத்தவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் நிமல் லன்சா எம்.பியின் வீடு தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. மொரட்டுவை வில்லோரவத்தையில் அமைந்துள்ள மொரட்டுவை மேயர் சமன் லால் பெர்னாண்டோவின் இல்லத்திற்கு சிலர் தீ வைத்துள்ளனர். நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அரசாங்க ஆதரவாளர்களை ஏற்றிவந்த தனியார் பஸ்ஸொன்று மாளிகாவத்தை பகுதியில் வைத்து தீவைப்பு.

கோட்டா ஹோ கம வின் மீது தாக்குதல் நடத்திய ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் சிலர், போராட்டக்காரர்களிடம் சிக்கிக்கொண்டனர். அவர்களை போராட்டக்காரர்கள் முழந்தாளிட வைத்துள்ளனர்.

### வீரகெட்டிய பகுதியில் துப்பாக்கிச் சூடு : இருவர் பலி - எட்டு பேர் படுகாயம்

அம்பாந்தோட்டை வீரகெட்டிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீரகெட்டிய பிரதேச சபையின் தலைவரின் வீட்டில் குறித்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதோடு எட்டு பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# காலி முகத்திடல் தாக்குதல் 65 வருட அரச பயங்கரவாதத்தை மீண்டும் ஞாபகமூட்டுகின்றது

(சுமன்)

காலி முகத்திடல் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான கொடூரமான தாக்குதல் 65 வருட கால அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்திய அரச பயங்கரவாதத்தை நினைவூட்டுகின்றது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இனறைய தினம் காலி முகத்திடல் அமைதியான போராட்டத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதலுக்கு தம் கண்டனத்தை வெளியிடும் முகமான அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது குண்டர்களை ஏவி தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும். அரசாங்கத்துக்கு சார்பாக அலரி மாளிகையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் காலிமுகத்திடலில் கடந்த 30 நாட்களாக போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தமிழ் மக்கள் மீது கடந்த 65 வருடங்களாக மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அரச பயங்கரவாதத்தை நினைவுபடுத்துகின்றன.

தமது உரிமைகளுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட்டம் மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது படையினரை ஏவி தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டிருந்தன. இதுவே பின்னர் ஆயுத போராட்டத்துக்கு தமிழ் மக்களை தள்ளியது. அதேபோல, உணவு, எரிபொருள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றுக்கான தமது உரிமைகளை வலியுறுத்தி அமைதியான வழியில் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களின் மீது குண்டர்களை ஏவியும் படையினரின் உதவியுடனும் அரசாங்கம் இன்று மேற்கொண்ட வன்முறை மேலும் வன்முறையை தூண்டும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்த சம்பவங்களில் இருந்து தூர விலகி நின்று மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



அரசாங்கம் இன்றைய சம்பவத்துக்கு பொறுப்பு ஏற்கவேண்டும். தமிழ் மக்கள் மீது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்தி பல்வேறு ஆதாரங்களின் மத்தியிலும் தாம் எந்த ஒரு படுகொலையிலும் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் இன்றுவரை எவ்வாறு வாதாடுகின்றதோ, அதேபோல, இன்றைய சம்பவத்துக்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று (பல்வேறு காணொளி ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும்) வாதாடும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்றவற்றை திடீரென்று கொண்டு வந்தது இவ்வாறு மக்களை அடித்துத் துன்புறுத்தி இராணுவ அரசாங்கம் ஒன்றை கொண்டு வரவோ என்ற சந்தேகம் எழுகின்றது.

தமிழ் மக்களை எவ்வாறு பயங்கரவாதிகள் என்று சித்திரித்து அவர்கள் மீது வன்முறையை ஏவி விட்டார்களோ அதே போல் இனி சிங்கள மக்களுக்கும் எதிராக பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று ஏதேனும் ஒரு சொல்லைப் பாவித்து வன்முறை அரசாங்கம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சந்தேகப்படுகின்றேன். ஆகவே தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் இவை யாவும் தமிழ்ப் பயங்கரவாதிகளின் சூழ்ச்சி என்று அரசாங்கம் தமிழர்கள் மேல் அல்லது முஸ்லீம்களின் மேல் திருப்பி பாரத்தைப் போட்டு விடுவார்கள் என்று தெரிவித்தார்.

## அரசாங்கத்தின் குண்டர்களால் தாக்கப்பட்டனர்

பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் நேற்று கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதற்கு முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மஹிந்தவின் ஆதரவாளர்கள் அலரி மாளிகைக்கு முன்னால் இருந்த மைனா கோ கமா மற்றும் காலி முகத்திடலில் உள்ள கோட்டாகோகம ஆகிய இரண்டு போராட்ட தளங்களையும் அடித்து நொறுக்கு தீயிட்டனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து, டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள குமார் சங்கக்கார, அமைதியான போராட்டக்காரர்கள் அரசாங்கத்தின் குண்டர்களால் தாக்கப்பட்டனர் என கடுமையாக சாடியுள்ளார்.

நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொது மக்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு கண்டனம் வெளியிட்ட அவர் இதனை கூறியுள்ளார்.

31 ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
28.07.1938

இறைவனடியில்
13.04.2022



தாந்தியான்
லெட்சுமிப்பிள்ளை

கடந்த 13.04.2022 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தின் தெய்வம் அன்புக்குரிய அம்மா
அமரர் தாந்தியான் லெட்சுமிப்பிள்ளையின்
31 ம் நாள் நினைவஞ்சலிக்கிரியைகள்
எதிர்வரும் 13.05.2022 அன்று வெள்ளிக்கிழமை
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் .

குடும்பத்தினர்:
513 /2 திருமலைவீதி மட்டக்களப்பு.
தொலைபேசி இலக்கங்கள்.
077754 1673 / 077075 4084

## வன்முறைகளை தூண்டிதன் பின்னணியிலுள்ள அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான தீர்வினை வலியுறுத்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டமை மனிதாபிமான செயற்பாடல்ல.

இதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட பொறுத்தமற்றவர்கள் என்று நான்கு பிரதான பௌத்த பீடங்கள் தெரிவித்துள்ளன.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் , அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், அமரபுர மகா பீடத்தின் மகாநாயக்க தொடம்பஹல ஸ்ரீ சந்திரசிறி தேரர் மற்றும் ராமஞ்ஞ மகா பீடத்தின் மகாநாயக்க மகுலேவி ஸ்ரீ விமலாஹிதான தேரர் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளின் வாழ்க்கை, சொத்துக்கள் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் என்பவற்றை பாதுகாக்கும் பொறுப்பு அரசியலமைப்பின் மூலம் அரசியல் தலைவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வன்முறையைத் தூண்டி குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் பௌத்த பீடங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறான நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போதாவது உரிய

தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு கலவரம்: வட, கிழக்கில் போராட்டம்




கிளிநொச்சி அறிவியல் நகர் பல்கலைக்கழக வளாக மாணவர்கள் போராட்டம் தென்னிலங்கை சம்பவத்தை கண்டித்து யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 5.15 மணியளவில் கிளிநொச்சி அறிவியல் நகர் பல்கலைக்கழக வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அ9 வீதி வரை முன்னெடுக்கப்பட்டு அ9 வீதி போக்குவரத்துக்கு எந்த இடையூறு செலுத்தாமல் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆரம்பமான போராட்டம் இன்று பாரிய வன்முறைச் சம்பவமாக வெடித்துள்ளது.

கோட்டா கோ கமவில் நடத்தப்பட்ட போராட்ட இடத்திற்கு வருகை தந்த குண்டர்களால் அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் உள்ளிட்டவை அடித்து நொறுக்கப்பட்டு கலவரம் உண்டாக்கப்பட்டுள்ளது.

இவேளை, திருகோணமலை அலஸ் தோட்ட வீதி, கந்தளாய் உள்ளிட்ட சில இடங்களில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதன் போது அரசாங்கத்துக்கு எதிராக பல கோசங்களை எழுப்பியதுடன் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை கோரியும் மக்களால் போராட்டம் இடம் பெற்றது.

எப்படி இருந்த போதிலும் கொழும்பில் கைகலப்பு ஏற்பட்டுள்ளதுடன் பிரதமராக செயற்பட்ட மஹிந்த ராஜபக்ச தனது இராஜினாமா கடிதத்தையும் அரசதலைவருக்கு அனுப்பியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போராட்டக் காரர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்தல் ஆபத்தானது



(ஹஸ்பர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது போராட்டங்களை நடாத்துகின்ற மக்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து பதவி விலகாமல் காலத்தை இழுத்தடிப்பது போராட்டத்தை மேலும் உக்கிரமடையச் செய்யும் ஆபத்து மிக்கது என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம் எம் மஹ்தி தெரிவித்துள்ளார்.

நேற்று (09) அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தமது இலக்கை அடையும் வரை வியூகங்களை மாற்றி மாற்றி போராட்டத்தை தொடரும் போராட்டக் காரர்கள் 11ம் திகதியிலிருந்து தொடரான ஹர்த்தாலை அறிவித்திருக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை சுற்றி வளைத்தல், அரச ஊழியர்கள் தொடரான பணிப் பகிஷ்கரிப்பு, போக்கு வரத்தை ஸ்தம்பிக்கச் செய்தல், அனைத்து தனியார் வாகனங்களையும் வீதியின் குறுக்கே விட்டுச் செல்லல் , அரச ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அமைச்சர்களினதும் இல்லங்களை முற்றுகையிட்டு அவர்களை வீட்டுக் காவலில் வைத்தல், ஆட்சியாளர்களை சுற்றி வலைத்தல் என வியூகங்கள் மாற்றப் பட்டு போராட்டங்கள் நீண்டு கொண்டு செல்வதற்கான வாய்ப்புகளே காணப்படுகின்றன.

பதவி பட்டங்களுக்காக சர்வாதிகளாக மாறியிருந்த ஆட்சியாளர்களின் இறுதித் தருணம் எவ்வாறு அமைந்திருந்தன என்பது நமக்கும் சிறந்த படிப்பினையாகும்

எனவே ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இறுதியில் அவமானப்பட்டு அசிங்கப்படுத்தப் பட்டு வெளியேற்றப் படுவதற்கு முன்னர் நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு தாமாகவே பதவிகளை துறந்து உடனடியாக புதிய அரச நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு இடமளித்தல் மாத்திரமே சிறந்த பலனைத் தரும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனையில் தமிழர்களின் காணி உரிமை கபளீகரம்!

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் ராஜன் கண்டனம்

( காரைதீவு நிருபர் சகா)

கல்முனை மாநகரத்தில் தமிழர்களின் இருப்பை இல்லாதொழிக்கும் சதித்திட்டத்தின் ஓரங்கமாக காணி பதியும் உரிமை கச்சிதமாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. இவை ஒருபோதும் இன உறவை வலுப்படுத்த உதவாது.மாறாக விரிசல்களை ஏற்படுத்தும்.இதனை வன்மையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது....

கல்முனை காணி பதிவகத்தில் காணி மற்றும் ஆவணங்கள் பதிவு நடவடிக்கைகள் பிரதேச செயலக ரீதியில் 2012 இல் இருந்து பதிவு செய்யப்பட்டு வந்தது.

13 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி கல்முனை காணி பதிவகம் இயங்கி வருகிறது.

காணி பதிவகத்தின் கீழ் கல்முனை வடக்கு செயலக பிரிவின் கீழ் உள்ள 29 கிராம சேவகர் பிரிவில் உள்ள காணிகள் இதுவரைகாலமும் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவின் பதிவு செய்யப்பட்டு வந்தது.



கல்முனையின் இனவாதத்தையும், இன குரோதத்தையும் விதைத்து அரசியல் செய்து வரும் வங்குரோத்து அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான அழுத்தத்தினால் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உரிய பதிவு நடவடிக்கை அனைத்தும் கல்முனை தெற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் மாற்றப்பட்டு உள்ளது.

பதிவாளர் நாயகத்தின் கடித்தின் பிரகாரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திலிருந்தும் தமிழ்பிரதேச காணிப் பதிவுகளை அங்கு பதியவேண்டாம்.இனிமேல் எமது செயலகத்தின் பெயரின் கீழ் மட்டுமே பதிய வேண்டும் என பதிவாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாம்.

இந்த விடயம் கல்முனையில் தமிழ் முஸ்லிம் இன விரிசலை மேலும் வலுப்படுத்தி அரசியல் ஆதாயம் பெறவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உறவு கொண்டாடும் தலைமைகள் இது விடயத்தில் கவனம் எடுப்பார்களா?

# இழுதுமீனுக்கு இளம் மீனவர் பலி
## காரைதீவில் சம்பவம்

( காரைதீவு சகா)

கடலில் வாழும் இழுது மீனின் பிடிக்குள் சிக்கி இளம் மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று (8) ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவு.8 ஆம் பிரிவைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் ( வயது 51) என்ற மீனவரே இவ்விதம் இழுது மீனின் பிடிக்குள் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

காரைதீவில் முதலாவதாக இடம் பெற்ற இழுதுமீன் பலி என்பதால் மீனவர் மத்தியில் அச்சமும் சோகமும் நிலவுகிறது.

3 பிள்ளைகளின் தந்தையான சு.ஜெயரஞ்சன் பிள்ளைகளையும் மனைவி வி.சுகந்தியையும் விட்டு சென்றுள்ளார்.

கடலில் வாழும் ''சொறி முட்டை'' என அழைக்கப்படும் இழுதுமீன், நுங்கு மீன் ,ஜெலிபிஸ் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.



நேற்று முன்தினம் (8) காலை 7.30 மணியளவில் கடலுக்கு மாயாவலை மீன்பிடி தொழிலுக்காக சென்றவேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கரையிலிருந்து சுமார் 100மீற்றர் கடலில் தோணி வந்து கொண்டிருந்தவேளை இறங்கி வலையை கழற்றும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த வேளையில் திடீரென இழுதுமீன் தலைப்பிட்டு மீனவரை சுற்றிக்கொண்டது. இதை தற்செயலாக கண்ட ஏனைய மீனவர் அவரை காப்பாற்ற முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை.

ஒருவாறு அவரை கரைக்கு கொண்டு வந்து வைத்திய சாலையில் சேர்த்தனர்.

எனினும்,காப்பாற்ற முடியவில்லை. பின்னர் தவிசாளர் கி.ஜெயசிறிலின் முயற்சியால் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது.

# திருமலை - மிகிந்தபுர பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரோருவர் கைது

(எப்.முபாரக் )

திருகோணமலை - மிகிந்தபுர பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவமானது நேற்றுமுன்தினம்(08) இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 10 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிண்ணியா -அண்ணல் நகர் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீண்ட நாட்களாக கிண்ணியா பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் சந்தேக நபர் குறித்து வந்த இரகசிய தகவலையடுத்து அவரை பின்தொடர்ந்த பொலிஸார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் கிண்ணியா பொலிஸாரினால் ஹெரோயின் போதைப் பொருளைதம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வழக்குகள் ஏற்கனவே அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





திருகோணமலை கண்டி வீதி ராஜவரோதயம் சதுக்கம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயிலின் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று இடம் பெற்ற போது.

(படங்கள் - அ . அச்சுதன் )




# அரசை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் ஆர்பாட்டம்

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட 12 ராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய கோரியும், இலங்கை கடற்படையால் அரசுடைமையாக்கப்பட்டு ஏலம் விடப்பட்ட படகுகளை விறகுக்காக விற்பனை செய்வதை கண்டித்து திங்கட்கிழமை(09) தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த மார்ச் மாதம் 23 ஆம் தேதி மீன்பிடிக்க சென்ற ஒரு படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் இலங்கை கடற்படை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். மீனவர்கள் வழக்கு வரும் 12ந் தேதி விசாரணைக்கு வர உள்ள நிலையில் மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியும், அதேபோல் இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்டு தாயகம் திரும்பி அனுப்பப்படாத மண்டபம் மீனவர்கள் 4 பேரையும் உடனடியாக தாயகம் திருப்பி அனுப்பி வலியுறுத்தியும், 2019ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை சிறைபிடிக்கப்பட்டு இலங்கை மீன்பிடித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடி விசைப் படகுகளை உடனடியாக மீனவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் மீனவர்கள் மற்றும் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை கடற்படையால் அரசுடைமையாக்கப்பட்ட பல கோடி ரூபாய் மதிப்பிலான மீன்பிடி விசைப் படகுகளை தற்போதுஇலங்கையில் ஏற்பட்டள்ள பொருளாதாரநெருக்கடி காரணமாக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ஏற்றத்தால் அந்தப் படகுகளில் இருந்து எடுக்கப்பட்ட மரப்பலகைகளை விறகுக்காக விற்பனை செய்வது வேதனை அளிப்பதாகவும், கடந்த 4 ஆண்டுகளாக இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை உடனடியாக தமிழக மீனவர்களிடம் ஒப்படைக்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்பாட்டத்தில் கலந்து னெகாண்ட மீனவர்கள் கோரிக்கை வைத்தனர்.

# ஆங்கில செயலமர்வு




(தலவாக்கலை பி.கேதீஸ்)

மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் ஊடாக நுவரெலியா கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு நுவரெலியா வலய கல்வி காரியாலத்திலும் தலவாக்கலை தேசிய பாடசாலையிலும் நடைப்பெற்றது.

இதன்போது மத்திய மாகாண கல்வி பணிமனையின் ஆங்கில பாட பணிப்பாளர் சாமரி அன்தாஜ், நுவரெலியா கல்வி வலய ஆங்கில பாட உதவி கல்வி பணிப்பாளர் வி.சாந்தகுமார் மற்றும் வளவாளர்கள் உட்பட ஆங்கில ஆசிரியர்களும் கலந்துக்கொண்டனர்.

# இந்த நாட்டிலே பூர்வீகக் குடிகளாக இருக்கின்ற எமது இனத்திற்கும் மதத்திற்கும் ஒரு அந்தஸ்து இல்லை

மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள் அதுதான் இந்த நாட்டிலே இன்று நடந்துகொண்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இழைத்த வினை இந்த நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அக்கறைப்பற்று கோளாவில் அறுத்தநாக் கொட்டீஸ்வரர் கூட்டுப் பிரார்த்தனை சபையின் ஓராண்டு நிறைவு விழாவில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அக்கறைப்பற்று கோளாவில் அறுத்தநாக்கொட்டீஸ்வரர் கூட்டுப் பிரார்த்தனை சபையின் ஓராண்டு நிறைவு விழா கோளாவில் பல்நோக்கு மண்டபத்தில் பெ.சண்முகம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில், எமது சமூகத்திலே ஆன்மீகக் கருத்துக்களை எடுத்துச் செல்லக் கூடிய இளைஞர்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காலகட்டத்தில் கோளாவில் பிரதேசத்திலே எமது இனம், மதம், சமூகத்திற்காக முன் நின்று உழைக்கும் இளைஞர்களைப் பார்த்து மிகவும் சந்தோசமடைகின்றேன். நிச்சயமாக இந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக எமது சமூகத்தை வழிநடத்துவார்கள். எமது தமிழுக்காவும், சமூகத்திற்காகவும், மதத்திற்காகவும் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர்களோ இதே அடிப்படையில் எமது மண்ணிலே தமிழ் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டு வருகின்றது. அதற்கான பலத்தைச் சேர்ப்பவர்களாக நீங்கள் இருந்து கொண்டிருக்கின்றீர்கள்.

இந்து மதம் காலத்தால் முற்பட்டது. ஆனால் எந்த இடத்திலும் எமது மதத்திற்கான தனித்துவம் இல்லை என்பதுதான் இன்று ஒரு மனவேதனையான விடயம். இந்த நாட்டிலே பூர்வீகக் குடிகளாக இருக்கின்ற எமது இனத்திற்கும் மதத்திற்கும் ஒரு அந்தஸ்து இல்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆலயங்கள் இன்று எமது மத ரீதியான அடையாளங்கள் அழிக்கப்பட்டு மாற்று மதத்தவரால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வரலாறுகள் அதிகம் இருக்கின்றன. உதாரணமாக கதிர்காமத்தைச் சொல்லலாம். தேவார, புராணங்களில் பாடப்பட்ட கதிர்காமத்திலே தற்போது என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது? தற்போதைய இந்த நாட்டின் அரச தலைவர் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், தான் பெரும்பானன்மை மக்களின் வாக்குகளைப் பெற்றவன், இது ஒரு பௌத்த நாடு என்ற ஆணவப் போக்கினை அன்று ஆரம்பித்தார். ஆனால், இன்று அவரின் நிலை என்ன? நாட்டின் அனைத்து பக்கங்களிலும் அவருக்கான எதிர்ப்பலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அவர் நல்ல மனநோக்கோடு இந்த நாடடின் பொறுப்பை எடுக்கவில்லை. இந்த நாட்டை நாசம் செய்ய வேண்டும் என்றே தான் அவர் இந்த நாட்டின் தலைவராக உருவாக்கப்பட்டார். இன்று இந்த நாட்டை நாசம் செய்து அழித்த ஒரு தலைவராக அனைத்து இன மக்களாலும் பாக்கப்படும் தலைவராகவே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச திகழ்கின்றார். தற்போது பாராளுமன்றத்தில் என்ன நடக்கின்றது என அனைவரும் அறிவார்கள். எமது இனத்தின் விடயங்களை நாங்கள் பேசுகின்ற போது நாட்டில் தற்போது பொருளாதார ரீதியான பிரச்சனைகள், நிருவாக நடைமுறைகள் சீராக இல்லை என்ற நிலைமைகள் எழுந்துள்ளன. ஒரு நாட்டுக்குப் பொருத்தமான ஒரு தலைவர் கிடைக்க வேண்டும். அவ்வாறான தொரு தலைவர் இலங்கைக்கு கிடைக்கப் பெறவில்லை. அதனால் நாங்கள் இன்று மோசமான துன்பங்களை அடைந்து கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய மக்கள் நீண்ட காலமாக போராடி இனரீதியாக அழக்கப்பட்டு, மீள்குடியேற்றங்கள் இல்லாமல், ஜனநாயகம், நீதி என்பன இல்லாமல் இருந்த காலங்களையெல்லாம் நாங்கள் எண்ணிப் பார்க்கின்றோம். மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள் அதுதான் இந்த நாட்டிலே இன்று நடந்துகொண்டிருக்கின்றது. எங்களுக்கிளைத்த வினை இந்தா நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே, இந்த நாடு ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும். அதற்கு மூவின மக்களும் ஒன்றுபட வேண்டும். அந்த ஒற்றுமையின் மூலம் இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகி ஒரு பொதுவான ஆட்சி உருவாக்கப்படுகின்ற போதுதான் இந்த நாட்டின் பெருளாதாரம் மேலோங்கி வரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

ஆனால், இதே நிலைமை நீடித்தால் போகின்ற போக்கில் எதிர்காலத்தில் அரச உத்தியோத்தர்களுக்குக் கூட சம்பளம் வழங்க முடியாத ஒரு நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இந்திய என்கின்ற நாடு நேசக் கரம் நீட்டவில்லை என்றால் இந்த நாட்டின் நிலை இன்னும் படு மோசமாக இருந்திருக்கும் என்று தெரிவித்தார்.

# சங்காபிசேகத்தில் இரண்டாம் கட்ட பணிநயப்புவிழா!





(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு பல்வேறு கோணங்களிலும் தொண்டாற்றி பணிசெய்து உதவிய அன்பர்களுக்கு இரண்டாம் கட்ட பணிநயப்புவிழா மகாசங்காபிசேகம் நடைபெற்ற வெள்ளியன்று(06) ஆலய சபாமண்டபத்தில் நடைபெற்றது.

இப்பணிநயப்பு விழா ஆலய அறங்காவலர்சபைத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அறங்காவலர்சபை ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

விழாவிற்கு முதன்மை அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். ஆன்மீக அதிதியாக ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

இரண்டாம்கட்ட பணிநயப்புவிழாவில் சிவாச்சார்யர்கள் ஆலய அறங்காவலர்சபையினர் அதீதநிதியுதவி நல்கியோர் மற்றும் மண்டலாபிசேகபூஜை உபயகாரர்கள் ஆகியோருக்கு மீனாட்சிதுரந்தரர் இறைபணிச்செம்மல் இறைநேசர் என்ற பட்டம் வழங்கி பாராட்டுமடல்கள்; வழங்கப்பட்டன.

# கல்விக்காக உழைத்த ஹுசைன் சேர் நிலையான தர்மத்தின் சோந்தக்காரராக இருந்தார்

கல்முனை சாஹிரா கல்லூரியின் ஆசிரியராக பல வருடங்கள் சிறப்பாக பணியாற்றி, பகுதித்தலைவராக வலம் வந்த எங்கள் ஏ.எம் ஹுசைன் சேர் அவர்கள் அதிபராக சுமார் பத்து வருடங்களுக்கு மேல் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் கடைமையாற்றி ஓய்வு பெற்றிருந்தார். கல்முனை ஸாஹிரா கல்லூரியின் வளர்ச்சியில் ஆசிரியராக, பகுதி தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக இருந்து கல்முனை ஸாஹிரா கல்லூரிக்கு பாரிய அளவிலான பங்களிப்பினை செய்த அன்னார் பௌதீக வள அபிவிருத்திகள் மட்டுமல்லாது பாடசாலையின் கல்வி மற்றும் கல்விக்கு வெளியிலான சகல துறைகளிலும் பாடசாலையை ஒளிரச்செய்திருந்தார் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



அவரது இரங்கல் செய்தியில் மேலும், கல்முனை ஸாஹிரா கல்லூரியின் முன்னாள் அதிபர் என்பதையும் தாண்டி சிறந்த அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர், நல்ல நிர்வாகியாக திகழ்ந்த அல்ஹாஜ் ஏ.எம் ஹுசைன் சேர் அவர்கள் காலமானார் எனும் செய்தியறிந்து மிக கவலையடைந்தேன். இவருடைய காலத்தில் நான் ஒரு மாணவனாக இருந்த நாட்கள் என் கண்முன்னால் வந்து செல்கிறது. பிரதேசத்தின் கல்விக்காக ஆற்றிய பணிகளுக்கும், கல்வி மேம்பாட்டுக்காக தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட அன்னாரின் நல்லமல்களை இறைவன் ஏற்றுக்கொண்டு மண்ணறை வாழ்வை வெளிச்சமாக்கி, ஜன்னதுல் பிர்தௌஸ் என்ற உயர்ந்த சொர்க்கத்தை கொடுத்தருள்வாயாக என்று இறைவனிடம் கையேந்தி பிராத்திக்கிறேன். ஏ.எம் ஹுசைன் சேர் அவர்களின் பிரிவால் துயருற்ற அன்னாரது குடும்பத்தினர், உறவினர் எல்லோருக்கும் என்னுடைய ஆறுதல்களை தெரிவித்து கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் எரிபொருள் யாவருக்கும் கிடைக்கும் விதத்தில் நடவடிக்கை

( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் மாவட்டத்தில் மீனவர்கள் விவசாயிகள் மற்றும் குடும்பத்தினர் எரிபொருள் பெறுவதிலுள்ள சிரமங்களை தவிர்த்து மன்னாருக்கு வரும் எரிபொருட்களை யாவருக்கும் சமமாக பிரித்து வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் திங்கள் கிழமை (09.05.2022) இது தொடர்பான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்



மன்னார் மாவட்டத்தில் விவசாயம் மீன்பிடி மற்றும் வீட்டுத் தேவைக்கான எரிபொருள் விநியோகத்தை எவ்வாறு சீர்செய்யலாம் தொடர்பாக மன்னார் மாவட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகள் மீனவ சங்கங்கள் எரிபொருள் நிலையங்களின் உரிமையாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் யாவரும் ஒன்றினைந்து இது விடயமாக கலந்துரையாடியுள்ளோம்.

இதன் அடிப்படையில் எவ்வாறு எரிபொருள் நிலையங்களிலிருந்து எந்தெந்த சங்கங்களுக்கு எவ்வாறு எரிபொருள் வழங்கலாம் என தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குடும்பங்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடு நிலவாதிருக்கு முகமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (13.05.2022) முதல் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வீட்டுத் தேவைக்கான மண்ணெணெய் பெறுவதற்கான குடும்ப அட்டைகள் விநியோகம் செய்து விடுவோம்.

இந்த குடும்ப அட்டையின் மூலமே அவர்களுக்கான வீட்டுத் தேவைக்கான மண்ணெணெய் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மண்ணெணெய் மட்டுமல்ல ஏனைய தேவைகளுக்கும் இவ் குடும்ப அட்டைகள் மூலம் ஒவ்வொரு குடும்பங்களும் தங்கள் பொருட்களை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயிகள் பொறுத்த மட்டில் ஏற்கனவே மன்னார் மாவட்டத்தில் சிறுபோகம் செய்வதற்கு 12 ஏக்கருக்கு ஒரு ஏக்கர் வீதம் நெற்செய்கை செய்வதற்கு தீர்மானிக்கப்படடிருந்தது ஆனால் இது தற்பொழுது பத்து ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்ற விகிதத்தில் சிறுபோகம் செய்யலாம் என்றவாறு திருத்தப்பட்டுள்ளது.

ஆகவே ஒரு ஏக்கருக்கு மூன்று உழவுகளுக்காக விவசாயிகளுக்கு 25 லீற்றர் டீசல் வழங்குவதற்காக தற்பொழுது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முதலாவது உழவுக்கு பத்து லீற்றர் டீசலும், பின் ஒரு வாரம் கடந்து இரண்டாவது உழவுக்கு எட்டு லீற்றர் டீசலும் இதைத் தொடர்ந்து மூன்றாவது உழவுக்கு மிகுதி டீசல் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வழங்கும் எரிபொருள் நிலையங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இவ் நெற் செய்கையில் ஈடுபடும் கமக்காரர்களின் விபரங்களை கமநல சேவை நிலையங்கலிருந்து பெறப்பட்டு அந்தந்த எரிபொருள் நிலையங்களுக்கு தெரியப்படுத்தப்பட இருக்கின்றது என இவ்வாறு தெரிவித்தார்.



# கண்ணகை அம்பாளின் திருக்குளிர்த்தி சடங்கு எப்போது?

## வைகாசி மாதத்தில் இரண்டு பூரணைகள் வருவதால் சர்ச்சை!

### சர்ச்சையை தீர்த்துவைக்கிறார் சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள்.

(வி.ரி.சகாதேவராஜா)

வைகாசி பிறந்துவிட்டால் வடக்கு கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பத்தினித்தெய்வமாம் கண்ணகை அம்பாளின் வைகாசிப் பொங்கல் அதாவது திருக்குளிர்த்திச் சடங்கு வைகாசிப் பூரணையில் நடைபெறுவது உலகமறிந்ததே.

ஆனால், இம்முறை தமிழ் வைகாசி மாதத்தில் இரண்டு பூரணை தினங்கள் வருகின்றன. முதலாவது பூரணை தினம் வைகாசி மாதம் முதலாம் திகதியிலும் (ஆங்கிலத்திற்கு மே 15ஆம் திகதி), இரண்டாவது பூரணை தினம் வைகாசிமாதம் 31ஆம் திகதியும் (ஆங்கிலத்திற்கு யூன் 14ஆம் திகதி) வருகின்றன.

இந்த 2 பூரணைதினங்களில் எதில் வைகாசிச்சடங்கை நடாத்துவதென்பதில் சர்ச்சை நிலவுகிறது.

இது தொடர்பாக காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்களிடம் கேட்டபோது கீழ்வரும் விளக்கங்களைக்கூறினார்.



இந்தவருடம் தமிழ் வைகாசி மாதம் இரண்டு பௌர்ணமி தினங்களுடன் அமைகிறது.

எமது சமயம்சார் வழிபாட்டுமுறைகளில் ஆகமம்சார் ,ஆகமம் சாரா வழிபாடுகள் நடைபெற்றாலும் இரு வழிபாடுகளிலும் காலநிர்ணயம் பெரும்பாலும் பஞ்சாங்கத்தின் அடிப்படையிலேயே நிகழ்வது வழமை.

ஒவ்வொருமாதமும் பௌர்ணமியோடு இணைந்து வருகின்ற நட்சத்திரம் அந்தமாதத்தில் சிறப்பிடம்பெறுகின்றது.

வழமையில் வைகாசியில் பௌர்ணமியும் அதனைத்தொட்டு விசாக நட்சத்திரமும் வருவது வழமை. எனவே வைகாசி விசாக உற்சவங்களும் வைகாசிபௌர்ணமியில் குளிர்ச்சியாடும் கண்ணகி ஆலயங்களும் கிட்டத்தட்ட ஒன்றாக வருவது கண்கூடு.

அதேவேளை, திதியை மையமாககொண்டு அனுஷ்டிக்கப்படும் உற்சவங்கள் சாந்திரமாச உற்சவங்கள் எனவும் நட்சத்திரத்தை அடிப்படையாக கொண்டு அனுஷ்டிக்கப்படும் உற்சவங்கள் நட்சத்திர மாச உற்சவங்கள் எனவும் அழைக்கப்படும்.

கண்ணகி அம்மன் திருக்குளிர்ச்சி திதி அடிப்படையில் (வைகாசித்திங்கள்-வைகாசி பௌர்ணமி)அனுஷ்டிக்கப்படுகின்ற உற்சவம் என்பதை கவனத்தில் கொண்டால் ஒரு மாதத்தில் இருநட்சத்திரங்களோ ,இரு திதிகளோவந்தால் பிந்தியதையே உற்சவாந்தமாகக் கொள்ளவேண்டும்.(உற்சவாந்தம்-- உற்சவம் அந்தம்) ஜோதிட விதியின் அடிப்படையில் கண்ணகி அம்மன் திருக்குளிர்ச்சி இரண்டாவது பௌர்ணமியில் (ஒக்மீஉ 14)கொள்வதே சாலச்சிறந்தது..

ஒருமாதத்தில் இரு பௌர்ணமிகளோ ,அமாவாசைகளோ வருமானால் அது மலமாதம் அல்லது அதிதமாதம் என நீக்கப்படும் என்பது காலவிதானம் தரும் விதி.

ஆகவே நட்சத்திர அமைவினடிப்படையில் முதலாவது பௌர்ணமியோடு வரும் விசாகத்தை வைகாசிவிசாகமாகவும் திதி விதி அமைவு அடிப்படையில் இரண்டாவது பௌர்ணமி கண்ணகி திருக்குளிர்சியாகவும் இரண்டு பஞ்சாங்கமும் கணித்துள்ளமையை உணர்ந்து செயற்படுவோம்.

அதன்படி ,பொதுவாக கண்ணகை அம்பாளின் திருக்குளிர்த்திச்சடங்கு யூன் மாதம் 6ஆம் திகதி (வைகாசி 23ஆம் திகதி) ஆரம்பமாகி யூன் மாதம் 13ஆம் திகதி(வைகாசி30) அல்லது யூன் மாதம் 14ஆம் திகதி (வைகாசி31) திருக்குளித்தி பாடலுடன் நிறைவடையும் என்றார்.

# திருமலை ஜமாலியா விளையாட்டுக் கழகம் சம்பியனாக தேரிவு






(எப்.முபாரக்)

திருகோணமலை அருணகிரி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் சுற்றுப்போட்டியொன்று திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (8)நடைபெற்றது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு ஜமாலியா விளையாட்டுக் கழகமும்,ஈஸ்டன் ஈகில் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

இறுதிப் போட்டியில் இரண்டு கழகங்களும் மோதி இறுதியில் 2:0என்ற கோல் கணக்கில் ஜமாலியா விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தினை தனதாக்கியது. இதன் போது இளைஞர் சேவை அதிகாரியினால் வெற்றிக்கிண்ணம் மற்றும் அதிக கோல்களை அடித்த வீரருக்கும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன.

அருணகிரி இளைஞர்கழக தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# விளாவூர் யுத்தம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டு கழகம் சம்பியன்!!






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு - விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகம் தனது 52 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ''விளாவூர் யுத்தம்'' எனும் தொனிப்பொருளில் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டு கழகம் சம்பியனாக மகுடம் சூடியுள்ளது.

37 ஆணிகளின் பங்குபற்றலுடன் கடந்த 06 ஆம் திகதி விளாவட்டவான் ராஜா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிய விலகல் முறையிலான குறித்த உதைபந்தாட்ட சுற்று போட்டியின் இறுதி நிகழ்வு நேற்று மாலை (08.05.2022) ராஜா விளையாட்டுக்கழக தலைவர் சி.கேதீஸ்ரன் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றின் முதலாவது போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா அணியும், குருந்தையடிமுன்மாரி ரென்ஸ்டார் அணியும் மோதியிருந்தனர். குறித்த போட்டியில் தண்ட உதை மூலம் முனைக்காடு இராமகிருஸ்ணா அணி வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றின் இரண்டாவது போட்டியில் முகத்துவாரம் லைற்ஹவுஸ் அணியும், மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியும் பலப்பரிச்சை நடத்தியிருந்தனர். இதில் தண்ட உதை மூலம் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து மூன்றாம் நான்காம் இடங்களை தீர்மாணிக்கும் போட்டி தண்ட உதை மூலமான போட்டியாக இடம்பெற்றது.

குறித்த போட்டியில் வெற்றிபெற்ற முகத்துவாரம் லைற்ஹவுஸ் அணி மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொள்ள குருந்தையடிமுன்மாரி ரென்ஸ்டார் அணி நான்காம் இடத்தினை பெற்றுக்கொண்டது.

அடுத்து விளாவூர் யுத்தம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா அணியும், மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியும் மோதியிருந்தனர்

இதில் தண்ட உதை மூலம் 04:02 என்ற கோள்கள் அடிப்படையில் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணி முதலாம் இடத்தினை பெற்றுக்கொள்ள இடண்டாம் இடத்தினை முனைக்காடு இராமகிருஸ்ணா அணி பெற்றுக்கொண்டது.

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் சிறந்த வீரனாக மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியின் தயானந்தனும், சிறந்த பந்துக் காப்பாளராக முனைக்காடு இராமகிருஸ்ணா அணியின் பந்து காப்பார் குமணன் தெரிவு செய்யட்டனர்.

இறுதியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசில்கள் அதிதிகளினால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி என்.முகுந்தனும், கௌரவ விருந்தினராக மண்முனை மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.சண்முகராஜாவும் கலந்து கொண்டனர்.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் எம்.உதயகுமார், மண்முனை மேற்கு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் பி.ரூபராஜ், முதலைக்குடா மகா வித்தியாலய அதிபர் ரி.கோபாலப்பிள்ளை உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

# கடினப்பந்து கிரிக்கெட் போட்டி



(பொன்ஆனந்தம் )

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியின் பவளவிழா கடினப்பந்து கிரிக்கெட் போட்டியின் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாக இந்துக்கல்லூரி அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற போட்டி களில் இந்துக்கல்லூரி அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இரண்டாம் இடத்தைப்பெற்று ரன்னஸ் ஆக சென்.ஜோசப் கல்லூரி அணியினரும் வந்தனர்.

இந் நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர். சிவானந்தம் சிறிதரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.இச் சுற்றுப்போட்டியில் கல்லூரி அணியுடன் விவேகானந்தா கல்லூரி அணியினரும் கலந்துகொண்டு தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாணி அறநெறிப் பாடசாலை கட்டடம் திறந்துவைப்பு






(காரைதீவு நிருபர் சகா)

இந்து கலாசாரசமய அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிவனருள் பவுண்டேஷன் நிறுவன அனுசரணையில் மத்திய முகாம் நான்காம் கிராமம் வாணி அறநெறிப் பாடசாலை கட்டிட திறப்பு விழா நேற்று இடம்பெற்றது .

கட்டிட திறப்பு விழா முன்னதாக கலாசார ஊர்வலம் சகிதம் இடம்பெற்று சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை இடம்பெற்றது. பின்னர் வாணி அறநெறிப் பாடசாலை பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

ஆன்மீக அதிதி தேவகுமார் குருக்கள் முன்னிலையில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டார் .

கௌரவ அதிதிகளாக சிவனருள் பவுண்டேஷன் அம்பாரை மாவட்ட தலைவி தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுஷியா சேனாதிராஜா சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகா தேவராஜா செயலாளர் கேவாமதேவன் பொருளாளர் ஜனார்த்தனன் நாவிதன்வெளி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் யோகேஸ்வரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

அறநெறி பாடசாலை கட்டிடம் மற்றும் தளவாடங்கள் 4 லட்சம் ரூபாய் செலவில் சிவனருள் பவுண்டேஷன் அமைத்துக் கொடுத்தது மாத்திரமல்லாமல் அவை அதிதிகளால் கையளிக்கப்பட்டன.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு தகவல் உரிமை சட்டத்தின் அமைப்புக்கள் எனும் தலைப்பில் செயலமர்வு





(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் மே 03ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட 31ஆவது உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு தகவல் உரிமை சட்டத்தின் அமைப்புக்கள் எனும் தலைப்பில் செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (08) கந்தளாய் இளைஞர் நிலையத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வு சுதந்திர ஊடகவியலாளர்கள் மற்றும் புலனாய்வு ஊடகவியலாளர்களின் தேசிய அமைப்பாளர் லக்மால் கே.படுகே அவர்களினால் தகவல் உரிமை சட்டம் தொடர்பாக தெளிபடுத்தப்பட்டது.

இதன் போது இளைஞர் யுவதிகளுக்கு தகவல் உரிமைச் சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது,அதன் முக்கியத்துவம் மற்றும் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும்தெளிவுபடுத்தப்பட்டது.

மன்றத்தின் தலைவர் மஹிந்த சேனாரத்ன, அமைப்பாளர் சுகத் விஜேகுமார, கந்தளாய் கலாசார உத்தியோகத்தர் நிமல்சிறி பண்டார, இளைஞர் சேவை உத்தியோகத்தர் சுனில் ரத்நாயக்க, மன்றத்தின் செயலாளர் மனு சங்க காரியவசம்,அமதுரு அமரஜீவ உட்பட தமிழ் சிங்கள ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

# நன்றி சொல்கின்றோம்



எங்களது அம்மா சுகவீனமுற்று இருந்த காலத்தில் வீடு வந்து, தங்களுடைய தாய் போன்று பார்வையிட்டு தேவையான மருத்துவ உதவிகளை வழங்கிய டாக்டர். வை. நடராஜா, டாக்டர். சிவபாதம் விஸ்ணு மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் ச. சுகிர்தன்,திருமதி. சி. இளங்கோவன் அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரவித்துக் கொள்கிறோம். மற்றும் எங்களது அம்மாவின் கண் நெகிழ் செய்தியறிந்து எமக்கு பல்வேறுவழிகளில் உதவியோருக்கும் பதாதைகளையும் அனுதாப பிரசுரங்களையும் வெளியிட்ட பின்வருவோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

1. முனைக்காடு ? கொட்டாம்புலைப் பிள்ளையார் , முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபை.
2.உலகிப்போடி குல சந்ததியினர் , உலகிப்போடி குலமடம் ரீ தான்தோன்றீஸ்வர ஆலயம், கொக்கட்டிச்சோலை
3.மட்டக்களப்பு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன நலன்புரிச் சங்கம்.
4. கல்கி நிறுவன உரிமையாளர் (Digital Print) திரு. மதன் அவர்களுக்கும்.
5.முனைப்பு சுவிஸ் / முனைப்பு இலங்கை நிருவாகத்தினர்.
6.சிவராம் ஞாபகார்த்தமன்றம் சுவிஸ்.
7.கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்.
8.உதயகுமார் கல்விநிலையம் முனைக்காடு.
9.கடல் கடந்த முனையின் கரங்கள் அமைப்பு.
10.சுபீட்சம் இலத்திரனியல் பத்திரிகை குழுமத்தினர்.
11. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியளாலர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக மையம், மட்டக்களப்பு மாவட்ட தொழில்சார் ஊடகவியளாளர்கள் ஒன்றியம்.

அத்துடன் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு இரங்கல் உரை ஒழுங்குபடுத்திய முனைப்பின் (இலங்கை) தலைவர் திரு.மா.சசிகுமார், செயலாளர் திரு இ.குகநாதன் அவர்களுக்கும், இதன்போது இரங்கல் உரையாற்றிய திரு ஞானமுத்து ஸ்ரீநேசன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்).
திரு மா.உதயகுமார் (முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர்)
திரு மா.சத்தியநாயகம் அதிபர் (மட்/விவேகானந்தா தேசிய பாடசாலை முனைக்காடு)
திரு இ.சாந்தலிங்கம் ( வண்ணக்கர் செயலாளர் கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயம்), திரு பொ.டிமலேஸ் (செயலாளர் தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலயம்),
திரு ந.ஹானுகிருஸ்னா(ஆசிரியர்), திரு சிவம் பாக்கியநாதன் (ஊடகவியலாளர் ,மாநகரசபை உறுப்பினர் மட்டக்களப்பு)
மாணிக்கப்போடி மங்களேஸ்வரி (சட்டத்தரணி)
திரு பா.இன்பராஜா(ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்)
திரு கனகரத்தினம் மயூரன். திரு வாமதேவன்.

அத்துடன் அம்மாவின் நினைவு மலருக்கு ஆக்கங்களை வழங்கிய கொக்கட்டிச்சோலைரீதான்தோன்றீஸ்வரர் ஆலய குருக்கள் சோதிலிங்கம் ஐயா திரு திரு பா.சபாரெத்தினம் (வண்ணக்கர் பொருளாளர் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்) திரு ஞானமுத்து ஸ்ரீநேசன், திரு இராஜேஸ்வரன் ஆசிரியர்அவர்கட்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
குடும்பத்தினர்.

# மக்கள் நம்பிக்கையை இழந்த இப்பாராளுமன்றம் காலாவதியாகிவிட்டது: தேர்தல் ஒன்றே மீட்சிக்கு வழி

(சுமன்)

தற்போது மக்களின் விருப்புகளை பிரதிபலிக்காத, நம்பக்கத் தன்மையை இழந்த ஒரு அவையாக இயங்குவதால் இப்பாராளுமன்றம் காலாவதியாகிவிட்டது. நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்களுடன் இணைந்து இந்த நிலையை தீர்ப்பதென்பது எப்படிச் சாத்தியமாகும்? எனவே, ஒரு தேர்தல் நடத்தப்பட்டு புதியதொரு மக்கள் ஆணை பெறப்படுவதன் மூலமே இப்பிரச்சினையில் இருந்து மீளெழ முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தம் சொந்த இனத்திடமே பொய் கூறி அவர்களை ஏமாற்றி அவல நிலைக்கு உள்ளாகியிருக்கும் சிங்களத் தலைவர்கள், தமிழ் மக்கள் தொடர்பிலும், சமஷ்டி தொடர்பிலும் கூறிய விடயங்களில் உண்மைத் தன்மை இருக்குமா? என்பதை இத் தருணத்திலாவது சிங்கள மக்கள் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் தொடர்பிலான நிதி அமைச்சரின் அறிக்கை மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலின் பின்னர், நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை தொடர்பான அமைச்சக அறிக்கை தொடர்பாக இன்று விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கையில் நிதி அமைச்சர் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்திருக்குமென தாம் கருதும் விடயங்களை, தமது அரசாங்கத்தின் தவறான முடிவுகள் உள்ளடங்கலாக, பட்டியலிட முனைந்திருக்கிறார். அத்துடன் நின்றுவிடாது, வழமைபோன்று, இந்த அரசாங்கத்தின் மீது முழுப்பொறுப்பையும் சுமத்தாது, தொடர்ச்சியாக ஆட்சிசெய்த முன்னைய அரசாங்கங்கள் மக்களைக் கவருவதற்காக மேற்கொண்ட பல்வேறு தவறான நடவடிக்கைகளும், ஈற்றில் இந்நிலை உருவாவதற்குக் காரணமாக அமைந்துள்ளன எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆனால் யாராலும் ஒருவராலும் மறுதலிக்க முடியாத ஒருவிடயம் ஒன்றுள்ளது. உண்மையில் அதனை நிதி அமைச்சர் கூட ஒப்புக்கொண்டுள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் அந்தத் தேர்தலை இலக்கு வைத்து அறிவிக்கப்பட்ட வரி நீக்கம் மற்றும் வரிவிலக்கு நடவடிக்கைகளும் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை உருவாவதற்கு காரணமாக இருந்தது என்பதனை இவ் அவையில் உள்ள எவராலும் மறுதலிக்க முடியாது.

இந்த நாட்டின் பொருளாதாரம் அடிமட்டத்துக்குச் சென்று, கடன் சுமை கழுத்தை நெரிக்குமளவுக்கு சென்றமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இவையே, இலங்கைக்கான சர்வதேச சந்தைகளின் கதவுகள் மூடப்பட்டு, கடன்படுதிறன் சுட்டி கீழ் நிலைக்குச் சென்றுள்ளதுடன், கடன்கள் மறுக்கப்படும் நிலையை உருவாக்கி இந்த நாட்டை இன்றைய நிலையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் இறுதியில் பாரிய பொருண்மிய நெருக்கடியை ஏற்படுத்துமென, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கட்சி வேறுபாடின்றி எச்சரித்திருந்த நிலையிலும் அவற்றைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தாது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டு அரசாங்கம் செயற்பட்டமையின் விளைவே, இன்று நாடு எதிர்நோக்கும் இந்தநெருக்கடியாகும். இந்நிலையில் கோவிட் நிலவரமும் சேர்ந்துவிட, நாட்டின் பொருளாதாரம் முடங்கல் நிலைக்குச் சென்றது.

எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடக்கவிருந்த போது, கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக பின்போடப்பட்டது. அப்போது எதிர்க் கட்சியிலிருந்தவர்கள், வடக்கு கிழக்கிலிருந்து தெரிவானவர்கள் உள்ளடங்கலாக, இவ்வாறான வரிவிலக்கு நடவடிக்கைகள் நாட்டைபெரும் பொருண்மிய இக்கட்டுக்குள் சிக்க வைத்துவிடும் எனத் திரும்பத் திரும்ப எச்சரிக்கை விடுத்திருந்தார்கள். அப்போது நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இங்கு இருக்கவில்லை. ஆனால், இந்த அரசாங்கம், குறிப்பாக ஜனாதிபதி எதிர்தரப்பினரின் ஆலோசனைகளை செவிமடுத்திருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த பெரும்பான்மை அவர்களுக்கு அதிகாரபோதையை ஏற்படுத்தியிருந்தது.

வர்த்தக சமூகத்தினரும் பல முன்னணி பொருளியலாளர்களும் ஜனாதிபதிக்கு இதுகுறித்து பல கடிதங்கள் கூட எழுதியிருந்தார்கள். ஆனால், அவற்றுக்குப் பதில்கூட அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை பொறுப்புடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறு எவரையும் மதிக்காத திமிர்த்தனமான அணுகுமுறையுடன்தான், ஜனாதிபதி விடயங்களைக் கையாண்டார். அதேவேளை, அவரது அரசாங்கம் ஒரு படி மேலே சென்று ஜனாதிபதி எதைச் செய்தாலும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரவு தெரிவிப்பதையே கடமையாக கொண்டிருந்தது .

இவைதான் யதார்த்தமாக இருக்கின்ற நிலையில், இந்த கடும் பொருளாதார நெருக்கடிக்கு நேரடியாக முகம்கொடுக்கும் சாதாரண மக்கள், தாம் எத்தகையதொரு தவறை இழைத்து விட்டோம் என இப்போது உணரத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த ஜனாதிபதியினதும் இவ்வரசாங்கத்தினதும் முடிவுகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், இந்நாட்டின் மக்கள், இனிமேலும் இவ்வரசாங்கம் ஆட்சியில் இருக்கக்கூடாது என கூறுகிறார்கள்.



அதை செவிமடுக்ககூட இந்த ஜனாதிபதியும் அரசங்கமும் தயாராக இல்லாத போது, தமது ஜனநாயக ரீதியான எதிர்ப்பை காட்டுவதற்கு வீதிகளில் இறங்குவதை தவிர இந்த மக்களுக்கு வேறுதெரிவுகள் இருக்கவில்லை.

ஜனநாயக முறையின் படி மக்கள் ஒரு குறித்த காலத்துக்கு ஆட்சிபுரிவதற்கான ஆணையை வழங்கிய நிலையில், தாம் வழங்கிய ஆணை மீறப்பட்டதை உணரும்போது, தாம் மோசடிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பததை உணரும்போது, மக்களுக்கிருக்கும் ஒரே தெரிவு தாம் வழங்கிய ஆணையை மீள பெற்றுக்கொள்வது மட்டும்தான். ஆனால் இவ்வாறு தாம் வழங்கிய ஆணையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு சட்டரீதியாக ஏற்பாடுகள் எதுவும் இல்லாதிருப்பதால், மக்களின் முன் இருக்கும் ஒரே தெரிவு வீதிகளில் இறங்கி தாம் ஆணை வழங்கியவர்களை ஆட்சியில் இருந்து விலகுவதை உறுதிப்படுத்தும் வரை போராடுவது மட்டும் தான்.

வீதிகளில் மக்கள் இறங்கி போராடிக்கொண்டிருக்கின்ற அதே நேரம், நாங்கள் இங்கே பாராளுமன்றத்தில் ஒருநாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருகின்றோம். அது என்ன நாடகம்? யதார்த்தம் என்னவெனில் இப்பாராளுமன்றம் காலாவதியாகிவிட்டது. இந்த அவை உண்மையில் நாட்டு மக்களின் பொறுப்புகளை பிரதிபலிக்கவில்லை. ஆனால், தமக்கு நம்பகத்தன்மை இருக்கின்றது எனக் காட்டிக்கொள்வதற்காக இங்கு ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

மூன்று நான்கு வாரங்களுக்கு முன்னர்வரை இந்த அரசாங்கதிற்கும் ஜனாதிபதிக்கும் கண்ணை மூடிக் கொண்டு மூர்க்கத்தனமாக ஆதரவு வழங்கிய மிக நெருக்கமான கூட்டாளிகளாக இருந்த சில அரச தரப்பு உறுப்பினர்கள், திடீரென தாம் சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்து எதிர்த்தரப்பில் வந்து அமர்ந்துகொண்டார்கள்.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்னதாக இதே அவையில் இந்த சுயாதீன உறுப்பினர்கள் என தம்மைதாமே அழைத்துகொள்ளும் இந்த உறுப்பினர்கள் தாம் எதிர்த்தரப்பில் அமர விருப்பதாக அறிவித்தபோது, இது ஒரு நாடகம் என்பதை நான் அந்த இடத்திலேயே குறிப்பிட்டிருந்தேன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனக்கு முன்னர் பேசிய கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்கள் இன்றைக்கு எதிர்க்கட்சிகளின் பக்கத்தில் வந்து அமர்ந்திருக்கிறார். ஆனால் அவர் இன்று இங்கு பேசியவையெல்லாம், இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதை உறுதிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

அவர் என்ன கூறினார் என்பதை பாருங்கள், முதல் விடயமாக அவர் கூறியது ஜனாதிபதிக்கெதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவது அர்த்தம் இல்லையென்றும் அதன்மூலம் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய முடியாதென்றும் கூறினார். ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யவேண்டுமாயின், குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு 2/3 பெரும்பான்யுடன் நிறைவேற்றப்படவேண்டும், ஆனால் இங்கு எதிர்த்தரப்பிடம் 2/3 பெரும்பான்மை இல்லை, ஆகவே ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் இந்த முயற்சிகள் எல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை, மக்களை ஏமாற்றும் முயற்சி எனக் கூறியிருந்தார். இத்தனைக்கும் தான் எதிர்த்தப்பில் இருப்பதாக தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறார்.

சரி, அப்படி ஒரு சட்டவலுவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவதாயின் அதை அரசங்கத்துக்கெதிராக கொண்டுவர முடியும். அதற்கு இந்த எதிர்க்கட்சி உறுப்பினர் கூறுகிறார். எஸ்.ஜே.பி. கட்சியின் அடுத்த கட்ட நகர்வு எதுவெனத் தெரியாமல், அரசாங்கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு தாம் ஆதரவு தரமுடியாதெனக் கூறுகிறார். இது மிக இலாவகமாக தப்பிக்கும் செயலாகும், இப்படித்தான் கூறித்தப்ப போகிறீர்கள் என்றால், நீங்கள் எல்லாரும் எதற்காக எதிர்த்தரப்பில் வந்து அமர்ந்திருக்கிறீர்கள்?

இவர்கள் உண்மையில் என்ன கூற விரும்புகிறார்கள் என்றால், அவர்களின் சொற்களில் பொதிந்திருக்கும் அர்த்தம் என்னவென்றால், மக்களின் கருத்துகளுக்கு எதுவித மதிப்பும் அளிக்கத் தேவையில்லை, இப்போது இருக்கின்ற இதே நிலமையும் முறைமையும் தான் இனியும் தொடர வேண்டும் என்பதேயாகும் .

இந்த சிக்கல் நிலையில் இருந்து நாடு வெளியில் வரவேண்டுமென்றால் இங்கு ஒரு தேர்தல் நடைபெறவேண்டும். இதையே நான் கடந்த மாத அமர்விலும் வலியுறுத்தியிருந்தேன். ஒரு புதிய தேர்தல் நடந்து, அதை தொடர்ந்து இந்த அவையில் இருப்பவர்கள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை வரும் வரைக்கும், மக்கள் வீதிகளில் இருந்து கலைந்து போகப் போவதில்லை.

இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஏதாவது முயற்சி எடுக்கவேண்டுமாயின், இந்த நாட்டை இப்படி வங்குரோத்தடையச் செய்த அதே நபர்களுடன் தான் இணைந்து வேலைசெய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருப்பது தான் இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன் இருக்கின்ற மிகப் பெரியசவால்.

நாட்டை வங்குரோத்துக்குக்கு உள்ளாக்கியவர்களே இந்த அவையின் 2/3 பங்கினராக இருக்கின்ற நிலையில், எந்த கட்சியாவது, இந்த நடப்பு பாராளுமன்றத்தின் ஊடாக இந்த நிலமைகளை ஏதாவது ஒரு வழியில் சீர்செயலாம் என எண்ணினால், அதில் இந்த நிலமைக்கு காரணமான அரச தரப்பின் அரைவாசிக்கும் அதிகமானோரோடு இணைந்து வேலை செய்ய வேண்டிய நிலை உருவாகும். அப்படி நாட்டை வங்குரோத்து அடையச்செய்தவர்களுடன் இணைந்தே, இந்த வங்குரோத்து நிலையை தீர்ப்பது என்பது எப்படிசாத்தியமாகும்?

எனவே, ஒரு தேர்தல் நடத்தப்பட்டு புதியதொரு மக்கள் ஆணை பெறப்படுவதன் மூலமே இப்பிரச்சினையில் இருந்து மீளெழ முடியும். அதற்குத்தான் இப்போது நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். எவ்வளவு தூரத்துக்கு நீங்கள் தேர்தல்களை பிற்போடுகிறீர்களோ, அவ்வளவிற்கு இன்று நாம் எதிர்கொண்டிருக்கின்ற இந்த அரசியல் நெருக்கடி, மேலும் மோசமான நிலையை எட்டும். இந்த அவையானது தற்போது மக்களின் விருப்புகளை பிரதிபலிக்காத, நம்பக்கத்தன்மையை இழந்த ஒரு அவையாக இயங்குவதால், இந்த அரசியல் நெருக்கடி, ஒரு கலவரமாகவும் மாறக்கூடும். கலவரங்கள் ஏற்படும் போது என்ன நடக்கும்?

எங்களுக்கு இன்று ஒரு ஜனாதிபதி வாய்த்திருக்கிறார், அவர் இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், இராணுவ அதிகாரிகளை அமைச்சரவை அதிகாரிகளாகவும் செயலாளர்களாகவும் தொடர்ந்தும் நியமித்து அதில் மகிழ்ச்சியைக் கண்டுகொண்டிருக்கிறார். இப்படியான ஒரு பின்புலத்தில், மக்களின் குரல்கள் செவிமடுக்கப்படாத விசனத்தில் மக்கள் அடுத்த நடவடிக்கைகளில் இறங்கினால், என்ன செய்வீர்கள்? நீங்கள் இராணுவத்தை மக்கள் மேல் கட்டவிழ்த்து விடுவீர்கள். அதுதான் நடைபெறப்போகிறது.

அத்தகைய ஒரு தருணத்தை நோக்கித்தான் இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் விடயங்களை நகர்த்தி வருகிறார்கள். இந்நிலையில் இங்கு அவையில் எதிர்த்தரப்பில் இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களது நம்பகத்தன்மையை தக்கவைக்க வேண்டுமாயின், இப்பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அதற்கான 2/3 பெரும்பான்மையினை எமக்கு தாருங்கள், அப்போதுதான் நாம் ஒரு பாராளுமன்ற தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியைக் கோரமுடியும்.

ஏன் பாராளுமன்ற தேர்தல் வேண்டும் என கேட்கிறேன்? என்பதற்கு இன்னொரு காரணம். ஏதோ ஒரு காரணத்துக்காக ஜனாதிபதி இன்றோ நாளையோ ராஜினாமா செய்கிறார் என வைத்துக்கொண்டால், இந்த நடப்பு பாராளுமன்றம் தான் இன்னொரு ஜனாதிபதியை தேர்வு செய்ய வேண்டியிருக்கும். இப்பாராளுமன்றமே மக்களின் நம்பகத்தன்மையை இழந்துள்ள நிலையில், காலாவதியான ஒரு நாடாளுமன்றம் எப்படி தம்முள் இருந்து ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்வது? எனவே புதிய தேர்தல் ஒன்றின் மூலம் புதிய மக்கள் ஆணை பெறப்பட வேண்டும். இது தான் எமது கட்சியின் நிலைப்பாடு, இவ்விடயத்திற்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

எதிர்தரப்பில் உள்ளவர்களுக்கு இதனை நாம் சவாலாகவே விடுகிறோம். கௌரவ புஸ்பகுமார போன்றவர்களுக்கு சவாலாக விடுகிறோம். அவர்கள் நம்பகத்தன்மை கொண்டவர்களாக இருப்பின் இந்த அவையை கலைப்பதற்கு ஆதரவு வழங்குங்கள். அதற்காக மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவீர்களானால். அது ஜனாதிபதியை பதவியிலிருந்து இறக்குவதற்கும் வழிவகுக்கும். இதனை நீஙகள் செய்யத் தவறுவீர்களானால் நீங்கள் இந்நிலைக்கு பொறுப்பாளிகளாவீர்கள். இதற்கான பொறுப்புக் கூறவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவீர்கள்.

இன்று இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தீர்க்கமான ஆட்சிக் கட்டமைப்பு மாற்றம் ஏற்படவேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள். இதையே இன்று காலை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது ருவிட்டர் பக்கத்திலும் தெரிவித்திருந்தார். தீர்க்கமானதொரு மாற்றத்தையே அவர் கூறுகிறார் என்று நம்புகிறேன். ஏனெனில் இந்த நாட்டின் முழு கட்டமைப்புமே ஒரு தோல்வியடைந்த செயலிழந்த கட்டமைப்பாக மாறியுள்ளதென்பதை அரசியல்வாதிகளும் நாட்டு மக்களும் உணர்ந்துள்ளார்கள்.

இதனையே எதிர்த்தரப்பில் இருக்கும் தமிழ் கட்சிகள் இன்று மட்டுமல்ல, எப்போதும் கூறிவருகிறார்கள். இந்த நடப்பு அவையில் மட்டுமல்ல தொடர்ச்சியாக

மிகுதி 09 ஆம் பக்கம் பார்க்க...

**இன்று இந்த அரசியல் கட்டமைப்பானது அரசாங்கத்தினுடைய சொந்த இனமாகிய சிங்கள இனத்தை பாதிப்புக்குள்ளாகி வருகிறது. தங்கள் கண்களுக்கு முன்னாலேயே தாங்கள், தங்கள் தலைவர்களால் பொய்கள் சொல்லப்பட்டு ஏமாற்றப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்ற அவலத்தை இன்று சிங்கள மக்கள் எதிர்கொண்டுவருகிறார்கள். இது தவறவிடக்கூடாத முக்கியமான ஒரு தருணம் என நான் கருதுகிறேன். சர்வதேச நாணய நிதியம் தொடர்பாகவும், இன்றைய பொருண்மிய நெருக்கடி தொடர்பானதுமான விவாதத்தில், நான் இவ்விடயத்தை வலியுறுத்திக் கூறுவதற்கு காரணமிருக்கிறது.**

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# மக்கள் நம்பிக்கையை இழந்த இப்பாராளுமன்றம் காலாவதியாகிவிட்டது; தேர்தல் ஒன்றே மீட்சிக்கு வழி



**சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்டபோது, வெளிநாடுகளில் வாழும் எமது உறவினர்கள் என்னையும் எனது குடும்பத்தினரையும் வெளிநாடுகளுக்கு வந்துபுகலிடம் கோருமாறும் அங்கு வந்து குடியேறுமாறும் வற்புறுத்தினார்கள். இக்கட்டமைப்பு மாற்றமடைவது என்பது மிகமிக அரிதான விடயம் எனத் தெரிந்திருந்தும், எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் எனது உள்ளுணர்வு ஒன்றை சொல்லியது, இது தலைவர்களின் தவறு. சாதாரண மக்களுக்கு உண்மை கூறப்படவில்லை, என்றைக்காவது ஒரு நாள் இந்த உண்மைகளை அறியக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும் பட்சத்தில் அவர்கள் மாற்றமடைவார்கள். சரியான முடிவுகளை எடுப்பார்கள் என என் உள்ளுணர்வு கூறியதால், நான் நாட்டை விட்டு அகலும் முடிவை அன்று எடுக்கவில்லை.**

70 ஆண்டுகளாக ஒவ்வொரு பாராளுமன்ற அவைகளிலும் இந்த நாட்டின் கட்டமைப்பு மாற வேண்டும் என்பதையே மீளவும் மீளவும் தெரிவித்து வருகின்றார்கள். இன்று நடைமுறையில் உள்ள ஆட்சிக் கட்டமைப்பானது ஒருபோதும் சீராக செயற்படப் போவதில்லை. ஏனெனில், இந்நாட்டு மக்களில் ஒருபகுதியினர் இக்கட்டமைப்பை ஏற்றுக்கொள்வில்லை. தமிழர்கள் இக்கட்டமைப்பை நிராகரித்துவிட்டார்கள். முஸ்லீம்களும் இந்த ஆட்சிக்கட்டமைப்பை நிராகரிக்கும் குரலை தற்போது அதிகளவில் ஒலிக்க தொடாங்கியிருக்கிறார்கள்.

ஏனெனில், இந்த நாட்டினுடைய சிங்கள பேரினவாதத்தின் பேரில், அல்லது பாதுகாப்பின் பேரில் ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் யாரை இலக்கு வைக்கிறார்களோ அவர்களை இக்கட்டமைப்பினால் பாதுகாக்கவே முடியாது. பல்வேறு காரணங்களினால் இக்கட்டமைப்பு தோல்வியடைந்திருக்கிறது. இக்கட்டமைப்பு மாற்றப்பட வேண்டுமானால், எவ்வாறு மாற்றப்பட வேண்டும்? சில வாரங்களுக்கு முன்னர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் பதின்மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்.

பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்துவது என்றால் என்ன? கடந்த முப்பத்திநான்கு வருடமாக இருக்கும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தில் எதனை அமுல்ப்படுத்தப் போகிறீர்கள்? இதுவரை அமுல்படுத்தாதவற்றை அமுல்படுத்தப்போகிறீர்களா? அது உங்களால் முடியாது. பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலம் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் உள்ளது. அது ஒற்றையாட்சி முறையில் உள்ளவரை உங்களால் அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்த முடியாது.

உயர்நீதிமன்றம் ஒரு தடவையல்ல முப்பது தடவைகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அதிகாரப் பகிர்வினை முறையாக அமுல்படுத்துவதானால், பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தினால் முடியாது. அரச கட்டமைப்பானது மாற்றப்படவேண்டும். அரச கட்டமைப்பை மாற்றுவது என்றால் என்ன? ஏற்கனவே இருக்கும் ஒற்றையாட்சி முறையிலிருந்து நீங்கள் விலகி, புதியதொரு கட்டமைப்புக்கு செல்லவேண்டும்.

இன்று இந்த அரசியல் கட்டமைப்பானது அரசாங்கத்தினுடைய சொந்த இனமாகிய சிங்கள இனத்தை பாதிப்புக்குள்ளாகி வருகிறது. தங்கள் கண்களுக்கு முன்னாலேயே தாங்கள், தங்கள் தலைவர்களால் பொய்கள் சொல்லப்பட்டு ஏமாற்றப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்ற அவலத்தை இன்று சிங்கள மக்கள் எதிர்கொண்டுவருகிறார்கள். இது தவறவிடக்கூடாத முக்கியமான ஒரு தருணம் என நான் கருதுகிறேன். சர்வதேச நாணய நிதியம் தொடர்பாகவும், இன்றைய பொருண்மிய நெருக்கடி தொடர்பானதுமான விவாதத்தில், நான் இவ்விடயத்தை வலியுறுத்திக் கூறுவதற்கு காரணமிருக்கிறது.

நான் இவ்வகையில் பலதடைவைகள் கூறியதுபோன்று, இப்போது முதற் தடவையாக இக்காரணங்களால் ஒருவாய்ப்பு உருவாகியிருக்கிறது. சிங்கள மக்கள் இன்று தங்களது தலைவர்கள் மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள். இதனை என்னை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக ஒரு பொய்யாக நான் கூறவில்லை. ஆனால், இது முக்கியமானதொரு தருணம். தமது தலைவர்கள் இந்நாட்டை அழிவிற்கு கொண்டு சென்றுவிட்டார்கள் என அவர்கள் உணர தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு யுத்தம் நடக்கவில்லை. அப்படியாயின் கடந்த பதின்மூன்று வருடகாலத்தில் இந்த நாட்டை சீர்ப்படுத்தி உறுதிநிலைக்கு நீங்கள் கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் நீங்கள் நாட்டை படுகுழிக்குள் கொண்டு சென்றிருக்கிறீர்கள். இன்றைக்கு நீங்கள் வங்குரோத்து நிலையை அடைந்திருக்கிறீர்கள். முதற்தடவையாக அவர்களது தலைவர்களை நோக்கி சிங்கள மக்கள் கேள்வியெழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். தமது தலைவர்கள் எடுத்த தவறான முடிவுகளால் அவர்கள்மீது கோபத்தில் உள்ளனர். இந்நிலையில் நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நான் கூறுகிறேன்.

நாங்கள் சிங்கள பொதுமக்களை இது பற்றிச் சிந்திக்குமாறு கேட்கிறோம். தம் சொந்த இனத்திடமே பொய் கூறி அவர்களை ஏமாற்றி அவலநிலைக்கு உள்ளாகியிருக்கும் தமது தலைவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்பதனை இந்த தருணத்தில் உணர்ந்து கொண்டிருக்கும் சிங்கள மக்கள், இந்த நாட்டின் மற்றைய தரப்பினராகிய தமிழ் மக்கள் தொடர்பில் சிங்களத் தலைவர்கள் கூறிய விடயங்களில் உண்மைத்தன்மை இருக்குமா? என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். சமஸ்டி முறைமை என்பது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று எதுவித கூச்சமுமில்லாமல் பொய் கூறி ஏமாற்றி வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் அதையே கூறிவருகிறார்கள். எனவே தான் சொல்கிறேன் இக்கேள்விகளை சிங்கள மக்கள் தங்கள் தலைவர்களிடம் கேட்க வேண்டும்.

இன்றைக்கு இந்த நாடு பாதுகாப்புக்கு பாதீட்டில் 19 சதவீதத்தைச் செலவிடுகிறது. அதில் 13 சதவீதம் நேரடியாக இராணுவத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. இது வருடாந்தம் இரண்டு சதவீதத்தால் உயர்த்தப்படவிருக்கிறது. இது யுத்தத்திற்கு பின்னரான நிலமை. இந்த நாட்டில் கல்விக்கும் சுகாதாரத்துக்குமாக சேர்த்து பத்து சதவீதத்துக்கும் குறைவாகவே வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுகின்ற போது, யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட, பாதுகாப்பு செலவீனத்துக்கென 19 வீதம் ஒதுக்கப்பட்டு வருகிறது. கல்விக்கும் சுகாதரத்துக்கும் ஒதுக்கும் பணத்தை விட மிகப்பெரிய பங்கை இன்றைய இக்கட்டான நிலையில்கூட, இராணுவத்திற்கென ஒதுக்கும் இந்த கட்டமைப்பு, ஒரு நிலைபேறான வளர்ச்சியைக் கொண்டுவரும் என எவராலும் எதிர்பார்க்க முடியுமா?

போர் முடிந்து இத்தனை காலத்துக்கு பின்னரும் நாட்டையே பிடுங்கி தின்கிற அளவுக்கு ஒரு பூதமாக வளர்ந்து வருகின்ற ராணுவக் கட்டமைப்பை பேணவேண்டிய தேவை என்ன? என்பதை சிங்கள மக்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்கவேண்டிய ஒரு முக்கியமான தருணம் இது. இன்று கனிந்திருக்கிற இந்த சந்தர்ப்பத்தை தவறவிடவே கூடாது.

தோல்வியடைந்திருக்கிற இந்த நாட்டின் கட்டமைப்பை மாற்றி, இந்த ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றி இந்த அழகிய தீவு தனியே சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரித்தானதல்ல என்பதை ஏற்று, இது சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லிம்கள் மலையகத்தமிழர்கள் பறங்கியர்கள் என அனைவருக்கும் உரித்தானது என்பதை ஏற்று, இந்த தீவில் சிங்கள மொழிபேசும் தேசமும் தமிழ்பேசும் தேசமும் இருக்கின்றது என்பதை அங்கீகரிக்கும் ஒரு சமஷ்டி கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டை ஒருபோதும் அழிவுப் பாதையில் இருந்து காப்பாற்றவே முடியாது போய்விடும்.

சாதாரண சிங்கள பொது மக்கள் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் இனியும் சிந்திக்காது விடின், இந்த மாற்றங்களை இன்று நீங்கள் நிகழ்த்தாது விடின், இந்த நாட்டின் பாதுகாப்பு செலவீனம் மேலும் மேலும் அதிகரித்து, நாட்டையே முழுமையாக அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். இன்றாவது சிங்களப் பொதுமக்கள் தமது தலைவர்களுடைய உண்மை நிலையினை அறிந்து கொண்டதன் பிற்பாடு மேற்குறித்த கேள்வியை கேட்டு ஒரு சரியான முடிவை நீங்கள் எடுக்காது விடின், நீங்கள்கூட இனவாத பாதையில் செல்வதாகவே நாம் முடிவெடுக்க வேண்டிவரும்.

சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்டபோது, வெளிநாடுகளில் வாழும் எமது உறவினர்கள் என்னையும் எனது குடும்பத்தினரையும் வெளிநாடுகளுக்கு வந்துபுகலிடம் கோருமாறும் அங்கு வந்து குடியேறுமாறும் வற்புறுத்தினார்கள். இக்கட்டமைப்பு மாற்றமடைவது என்பது மிகமிக அரிதான விடயம் எனத் தெரிந்திருந்தும், எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் எனது உள்ளுணர்வு ஒன்றை சொல்லியது, இது தலைவர்களின் தவறு. சாதாரண மக்களுக்கு உண்மை கூறப்படவில்லை, என்றைக்காவது ஒரு நாள் இந்த உண்மைகளை அறியக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும் பட்சத்தில் அவர்கள் மாற்றமடைவார்கள். சரியான முடிவுகளை எடுப்பார்கள் என என் உள்ளுணர்வு கூறியதால், நான் நாட்டை விட்டு அகலும் முடிவை அன்று எடுக்கவில்லை.

நான் விரும்பியிருந்த அந்த அரிய தருணம் இப்போது கனிந்து வந்திருக்கிறது. இத் தருணத்திலாவது சிங்கள் மக்கள் தங்களது கண்களைத் திறக்காவிடில், இலங்கை தனித்து சிங்கள மக்களுக்கு என்றில்லாமல், தமிழர்கள், முஸ்லீம்கள், பறங்கியர்கள் என அனைவருக்குமானது என்பதனை ஏற்றுக்கொள்ளாமலும், சிங்களம் பேசும் தேசமும், தமிழ்பேசும் தேசமும் இந்நாட்டில் இருப்பதனை ஏற்றுக்கொள்ளாவிடில், அதற்கேற்ற முறையில் அரசகட்டமைப்பு சமஸ்டி முறைக்கு மாற்றப்படாவிடில், இந்நாடு தோல்வியடைந்த நாடாகவே தொடர்ந்தும் இருக்கும். இவற்றை ஏற்றுக் கொள்ளாவிடத்து நீங்கள் பாதுகாப்புச் செலவீனங்களை தொடர்ந்தும் அதிகரிக்கவே வேண்டியிருக்கும் என்பதனால் நாடு தொடர்ந்தும் தோல்வியடையும். புதிய தலைமுறை தமிழ்ச்சமூகம், புதிய தலைமுறை புலம்பெயர் சமூகம், புதிய வழிமுறைகளின் மூலம் இவ்வரசினை தோல்வியுறச் செய்ய எத்தனிக்கும். ஏனெனில், இந்த அரசகட்டமைப்பு தங்களுக்கு எதிரானதான அமைந்திருப்பதாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

இவ்வளவு காலமும் சிங்களத் தலைவர்களே இந்த நிலைக்கு காரணமானவர்கள் என்று கூறிவந்தோம். இன்றைக்கு தாங்கள் தங்களது தலைவர்களால் ஏமாற்றப்பட்டுள்ளதனை நன்கு உணர்ந்திருக்கிற சிங்கள மக்கள், தமிழர்கள் மீதுதான் தவறு இருந்துவந்திருக்கிறதாகக் கூறமுடியாது. அவ்வாறு அவர்கள் கூறுவார்களேயானால், துரதிர்ஷ்டவசமாக அங்கும் இனவாதம் இருப்பதாகவே கருதவேண்டியிருக்கும்.


ஆனால், கொழும்பிலே பிறந்து அங்கேயே படித்து வளர்ந்து, மிக நெருக்கமான சிங்கள நண்பர்களைக் கொண்டவன் என்கிற வகையில், நான் மேலே சொன்னதைப் போல நீங்களும் இனவாதிகள்தான் என முடிவெடுக்க வேண்டிவரும் என்ற நிலையைப் பொய்யாக்குவீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு உண்டு என்பதையும் நான் இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

# செம்மொழிப்புலவர் ஆரையூர் அருள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆளுமைகளில் ஒருவராகவும், கலைஞராகவும் திகழ்பவர்தான் ஆரையூர் அருள் என எல்லோராலும் அறியப்பட்ட மூத்ததம்பி அருளம்பலம். இவரின் கலை, இலக்கிய, பண்பாட்டு, ஆன்மீக பணிகள் தொடர்பிலே ஆராய்கின்றது இவ்வார சுபீட்சம்.

கிழக்கு மாகாணத்தில் மீனிசைக்கின்ற மட்;டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப் பற்று பிரதேசத்தில் உள்ள ஆரையம்பதி கிராமத்தில் பிறந்தவர்தான் ஆரையூர் அருள். இலக்கிய பணிக்கென பல கலைஞர்களை ஈர்ந்தளித்த கிராமம்தான் ஆரையம்பதியாகும்.


1949இல் கதிராமர் மூத்ததம்பி, கந்தப்பர் அன்னம்மா ஆகியோருக்கு மகனாக அவரித்து, அப்போதைய ஆரைப்பற்றை இராமகிருஸ்ண மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயிற்றுள்ளார். பின் சிவானந்தா




தேசிய பாடசாலையில் உயர்கல்வியைக் கற்று 19%2இல் பொலனறுவை ஓனாகம முஸ்லிம் வித்தியாலயத்தில் கணித ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார். 16வருடங்கள் ஆசிரியர் சேவையில் சேவையாற்றி 1991இல் இலங்கை அதிபர் சேவைக்கு பதவியுர்வு பெற்று 2009இல் அதிபர் சேவை தரம் 1லிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பாடசாலை கல்வி கற்கும் காலத்தில் இருந்தே இலக்கியம், கலை, ஆன்மீகம் மீது அளவற்ற பிரியம் கொண்டவராக திகழ்ந்துள்ளார். தரம் 5இல் கல்வி கற்கின்ற போதே விபுலானந்தர் விழாவில் கவிதை வாசித்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். இவரின் திறமையை ஆரையூர் அமரன் பாராட்டி தொடர்ச்சியாக எழுதுவதற்கும் ஊக்கமளித்துள்ளார். சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் காலத்திலே பரிசளிப்புவிழா, ஸ்தாபகர் தின விழாக்களில் பங்கேற்று பல பாராட்டுக்களுக்கும் சொந்தக்காரர் ஆகியிருக்கின்றார். பாரம்பரிய கலைகள் மீதும் விரும்பு கொண்ட இவர், அவற்றில் பங்கெடுக்கவும் முயற்சிசெய்துள்ளார். இவ்விருப்பினை நிறைவேற்றும் வகையில், சத்தியவான் சாவித்திரி கூத்தில் சாவித்திரி என்ற பெண்பாத்திரமேற்று நடித்து மெச்சப்பட்டுள்ளார்.

கவிதை, நாடகம், கூத்து, கட்டுரை, சிறுகதை, வில்லுப்பாட்டு, காவியம், கும்மி, காவடி






என பரந்து விரிகிறது இவரின் இலக்கியப் பணி. 1992இல் பாரதி மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று எனும் தலைப்புடன் ஆரம்பித்த இவரின் கவிதைப்பணி 31கவிதைகளையும் கடந்து இன்றையநாளில் நிமிர்ந்து நிற்கிறது. பிரதேச, வலய, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடைபெற்ற கவிதைப்போட்டிகளில் பங்கேற்று வெற்றிகளையும் பெற்றிருக்கின்றார். 1986இல் அவள் என்ற சிறுகதை எழுதி அதன்மூலமாக சிறுகதை உலகிற்கு பயணித்த இவர், 20க்கும் அதிகமான சிறுகதைகளை எழு



தியுள்ளார். பரீட்சையமான காவியங்களில் வரும் காவிய நாயகர்கள் என்ற தலைப்பில் 199%இல் இவரால் எழுதப்பட்ட கட்டுரை பிரதேசமட்டப் போட்டியில் முதலிடத்தினைப் பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து இற்றைவரை 50;க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் பல பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் முதலிடங்களைப் பெற்றுள்ளன.

19%5இல் வித்தகர் விபுலானந்தர் என்ற வில்லுப்பாட்டினை எழுதி, வில்லுப்பாட்டு துறைக்குள் காலபதித்த இவர், இற்றைவரை 21க்கும் மேற்பட்ட வில்லுப்பாட்டினை எழுதி, மாணவர்களைக் கொண்டு பழக்கி தமிழ் மொழித்தின போட்டிகளில் பங்கெடுக்கச் செய்து வெற்றிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

19%3இல் நல்லதம்பி எனும் சமூக நாடகத்தின் மூலமாக நுழைந்த இவர், 19க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளதுடன், பாத்திரமேற்றும் நடித்துள்ளார். 1964இல் சாத்தியவான் சாவித்திரி தென்மோடி கூத்தினுள் சாவித்திரியாக பாத்திரமேற்று நடித்ததுடன், அதன் நெறியாழ்கையாளராகவும் செயற்பட்டுள்ளார். தொடர்ந்து கூத்தைப்பழக்குதல், நடித்தல், ஏட்டு அண்ணாவியாராக, மத்தள அண்ணாவியாராகவும் செயற்பட்டுள்ளதுடன், கூத்துக்களையும் எழுதியுள்ளார். இதுவரை 18கூத்துக்களில் இவரின் நேரடிப்பங்களிப்பு இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதே. இலக்கியத்தோடு நின்றுவிடாது, ஆன்மீகத்தில் அதீத ஈடுபாடு கொண்ட இவர், பேச்சியம்மாள் மீது அளவற்ற பக்தியும் கொண்டுள்ளார். நாள்தோறும் கல்லடி பேச்சியம்மன் ஆலயத்தினை வழிபடும் பழக்கத்தினை இன்றுவரை கொண்டுள்ளார். அவரின் பக்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களின் புகழைப்பாடுவதற்கு உந்துசக்தியைக் கொடுத்திருக்கின்றது எனலாம்.

மாவட்டத்தில் உள்ள நகர், கிராமங்களில் உள்ள பல ஆலயங்கள் பற்றி அவர் எழுதிய பாடல்கள் ஒலிப்பேழையாக வெளிவந்துள்ளன. 25க்கு மேற்பட்ட ஆலயங்கள் பற்றிய பாடல்கள் ஒலிப்பேழையாக வெளிவந்திருக்கின்றன.

பல்வேறு துறைகளில் பயணித்துக்கொண்டிருக்கின்ற இவர், 2001ம் ஆண்டு பேச்சியம்மாள் பாடல்கள் என்ற நூலை வெளியிட்டிருக்கின்றார். இதுவரை 10நூல்களை வெளியிட்டும் உள்ளார். இவரால் வெளியிடப்பட்ட நூல்களில் இறையின்பபாவாரம், தமிழ்கூத்தியல், வில்லடிப்பாட்டு போன்ற நூல்கள் மிக முக்கியமானவையாக கருதப்படுகின்றது. இறையின்பப்பாவாரம், தமிழ்கூத்தியல் போன்ற நூல்கள் கிழக்கு மாகாண இலக்கிய விருது பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே.

இவரால் வெளியிடப்பட்ட இறையின்ப பாவாரம் என்ற நூல் மிக மிக முக்கியமான




நூலாகும். இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களைப்பற்றிய கும்மி, காவடி, காவியம் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இதுவரை கிழக்கு மாகாணத்தில் இவ்வாறானதொரு நூல் வெளிவரவில்லை. இந்நூலின் மூலமாக ஆலயங்களின் அமைவிடம், தோற்றம், வரலாறு, அற்புதங்கள், உற்சவங்கள், நடைமுறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் இப்;பாடல்களில் உள்ளக்கப்பட்டுள்ளன. இந்நூல் பல்வேறு ஆய்வுகளுக்கு துணைபுரியும் என்பதில் சந்தேகமும் இல்லை.

தமிழர்களோடு பிணைந்த கலையாக கூத்துகலை இருப்பதுடன், இக்கூத்துப்பிரதிகள் யாரால் எழுதப்பட்டவை என்று தெரியாமலும், ஏட்டுவடிவில் கையளிக்கப்பட்டு வந்தமை வரலாறு. இந்நிலையில் கூத்துக்களை தற்காலத்திலும் பலரும் எழுதிவந்தாலும் ஒருசிலரே நூலக்கம் செய்துள்ளனர். அவ்வகையில்தான் ஆரையூர் அருளாள் எழுதப்பட்ட தமிழ்கூத்தியல் (தென்மோடி) நூலும் சிறப்பு பெறுவதுடன், தற்காலத்தில் கூத்துபயிலும் மாணவர்களுக்கு துணைபுரியும்.



வில்லுப்பாடல்கள் போட்டிகளுக்காக எழுதப்பட்டு, அவை பழக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்தாலும், நூலக்கம் பெற்றமை மிகக்குறைவே. இந்நிலையில் இவரால் எழுதப்பட்ட வில்லடிப்பாட்டு நூலும் முக்கியத்துமான நூலாக இருக்கின்றது. ஆரையூர் அருள் அளித்த நூல்களில் இம்மூன்று நூல்களும் வெவ்வேறு துறைகளில் முக்கியத்துவமானதாக விளங்குகின்றமை அவரின் ஆளுமைக்கும் உரம் சேர்க்கின்றது.

பல்துறை வித்தகனான இவர் பெறாத பட்டங்கள், விருதுகள் இல்லை எனலாம். இதுவரை கிராம, பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் 30க்கு மேற்பட்ட விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

பல்துறை வித்தகனாக, செம்மொழிப்புலவனாக திகழும் ஆரையூர் அருள், இன்றும் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாகவே வாழ்கின்றார். இளம் தலைமுறையினரை தட்டிக்கொடுத்து, ஊக்குவித்து, பல்கலை மாணவர்களுக்கு ஆய்வுகளுக்கு தேவையான வசதி, வாய்ப்புக்களையும், தேவையான உசாவுகளையும் கொடுத்து, பட்டங்களை பெற்றுக்கொள்வதற்கு உறுதுணையாகவிருக்கின்றார்.

பல்கலைக்கழக மாணவர்களினால் ஆய்வு செய்யப்படுகின்ற ஒருவராகவும், கலை, இலக்கிய போட்டிகளில் நடுவராகவும், வளவாளர்களாவும் செயற்படும் இவர், சகோதர இனத்தவர்களுடன் இணைந்தும் கலை, இலக்கிய பணிகளை முன்னெடுத்துவருகின்றமை அவரின் பணிக்கு சிறப்பே.

ஏடுகளையும், நூல்களையும் சேகரித்து பாதுகாக்கின்ற பெட்டகமாகவும் இன்றுவரை இவர் இருந்து வருகின்றமை எடுத்துக்காட்டத்தக்கதே. பாரம்பரிய கலைகள் எங்கு நடந்தாலும், அழையாவிருந்தாளியாய் முன்நிலையில் நின்று பார்க்கும், உதவிசெய்யும், ஊக்கம் கொடுக்கும் செயற்பாட்டாளராய் இன்றுவரை இவர் இருந்து கொண்டிருக்கின்றமை ஈன்ற ஆரையூர் மண்ணும், மீனிசை மாவட்டத்திற்கும் பெருமையே.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

